# அந்நியபாஷை

## வேதம்
## என்ன சொல்லுகிறது?



முனைவர் ஆ. திருமுருகன்

# அந்நியபாஷை

## வேதம் என்ன சொல்லுகிறது?

**Anniyabaashai**

*(Tamil)*

By Dr. A. Thirumurugan

**©Reserved**

First Edition: February 2015

All rights reserved.
No part of this book may be translated or reproduced in whole or in part in any form without the written permission from the author.

Cover: Dr. A. Thirumurugan

*Format:* Ebook

*Published by:*
Bible Insights Ministries
Neyveli, Cuddalore District
Pin 607 802

Price: ₹. 75

# அந்நியபாஷை

## வேதம் என்ன சொல்லுகிறது?

ஆ. திருமுருகன்

# அர்ப்பணம்

*தேவனுடைய வார்த்தையை மனோவாஞ்சையாய் ஏற்றுக்கொண்டு, காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று எல்லாவற்றையும் சோதித்துப்பார்த்து ஆராய்ந்து, அதின்படி செய்யவும், நலமானதை பிடித்துக்கொள்ளவும், அவைகளை மற்றவர்களுக்கு போதிக்கவும் தங்கள் இருதயத்தை பக்குவப்படுத்தியிருக்கிற அனைத்து தேவனுடைய ஊழியக்காரர்களுக்கும், சபை விசுவாசிகளுக்கும் இச்சிறு நூலை அர்ப்பணிக்கிறேன்.*

# பொருளடக்கம்

முன்னுரை ........ 06

**பாகம் I**

1. அந்நியபாஷை என்றால் என்ன? ........ 09
2. எதற்காக அந்நியபாஷை வரம் கொடுக்கப்பட்டது? ........ 13
3. வேதத்திலே அந்நியபாஷையில் யார் பேசினார்கள்? ........ 15
4. அந்நியபாஷையை குறித்த தவறான கருத்துக்கள் ........ 15

**பாகம் II**

1. அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில் அந்நியபாஷை ........ 19
2. எருசலேம் பட்டணம் ........ 19
3. செசரியா பட்டணம் ........ 20
4. எபேசு பட்டணம் ........ 21
5. அந்நியபாஷை: அன்றும் இன்றும் ........ 23

**பாகம் III**

1. கொரிந்து சபையில் அந்நியபாஷை ........ 24
2. கொரிந்து சபையில் காணப்பட்ட சில காரியங்கள் ........ 26
3. அந்நியபாஷை: அன்றும் இன்றும் ........ 30

**பாகம் IV**

1. அரிதானாலும் அறிந்துகொள்ள வேண்டியவைகள் ........ 31
2. பெந்தெகொஸ்தே நாளில் பேசியது 12 பேரா அல்லது 120 பேரா? ........ 31
3. தூதர் பாஷைகள் என்றால் என்ன? ........ 34
4. எல்லாரும் பேசும்படி ஏன் பவுல் விரும்பினார்? ........ 37
5. அந்நியபாஷையில் விண்ணப்பம் பண்ணுதல் என்றால் என்ன? ........ 39
6. அந்நியபாஷைகளில் பெண்கள் பேசினார்களா? ........ 40
7. தவறாக எடுத்துரைக்கப்படும் வேத வசனங்கள் யாவை? ........ 42
8. அடையாள வரங்கள் இப்பொழுதும் இருக்கின்றதா? ........ 42
9. அந்நியபாஷை வரத்தை இன்று நாடுவது சரியானதா? ........ 45
10. ஆவிக்குரிய முதிர்ச்சியைக் காண்பிக்கிறதா? ........ 46
11. “ஓய்ந்துபோம்” என்பதின் அர்த்தம் என்ன? ........ 48
12. “நிறைவானது” என்றால் என்ன? ........ 50
13. அநேகர் இன்று அந்நியபாஷையை நாடுவது ஏன்? ........ 53

**பாகம் V**

1. அந்நியபாஷை இன்று ........ 55
2. அந்நியபாஷை நின்றுபோய் விட்டது ........ 57
3. அந்நியபாஷையை குறித்து என்ன கூறுகிறார்கள்? ........ 58
4. அந்நியபாஷையை குறித்த ஆய்வு விளக்கங்கள் ........ 61

முடிவுரை ........ 63

# முன்னுரை

கர்த்தருக்குள் பிரியமான சகோதர சகோதரிகளுக்கு ஒன்றான மெய்த்தேவனாகிய இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில் எனது அன்பின் வாழ்த்துக்கள். நாம் வாழ்ந்து கொண்டிருக்கிற இந்த கடைசி நாட்களில் கிறிஸ்தவ உலகம் கள்ளக்கிறிஸ்துக்கள், கள்ளத்தீர்க்கதரிசிகள், வஞ்சிக்கிறவர்கள் மற்றும் கள்ள உபதேசங்கள் என்பவைகளாலே மலிந்து கிடக்கின்றன. இதை முன்னறிந்து தான் நமது கர்த்தராகிய இயேசு கடைசி நாட்களில்: *"கள்ளக்கிறிஸ்துக்களும் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, கூடுமானால் தெரிந்துகொள்ளப் பட்டவர்களையும் (தேவனுடைய கிருபையினாலே இரட்சிக்கப்பட்ட வர்களையும்) வஞ்சிக்கத்தக்கதாகப் பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள்"* என்று கூறினார் (மத்தேயு 24:11,24). ஆகையால் நாம் வாழ்கின்ற இந்த கடைசி காலத்தில் நாம் காண்கிறதும், கேள்விப்படுகிறதும், வேதத்தில் உரைக்கப்படாததுமாகிய அனைத்து நவீன உபதேசங்களுக்கும் செய்கைகளுக்கும் நாம் செவிகொடாமல்; தேவனுடைய வார்த்தை என்ன கூறுகிறதோ அவைகளை மட்டுமே மனோவாஞ்சையாய் ஏற்றுக்கொண்டு காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து ஆராய்ந்து அதின்படி செய்யவும், நலமானதை பிடித்துக் கொள்ளவும், அவைகளை மற்றவர்களுக்கு போதிக்கவும் நம்முடைய இருதயங்களை நாம் பக்குவப்படுத்த வேண்டியது மிக அவசியமான தொன்றாகும்.

இன்றைய கிறிஸ்தவ உலகில் அந்நியபாஷை என்கிற உபதேசமும் அதன் நடைமுறைப்படுத்தலும் எல்லா தரப்பு கிறிஸ்தவர்களையும் பாதித்து பெரும் குழப்பத்தை ஏற்படுத்தி வருகிறது என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. நம்முடைய வேதாகமத்தில் புதிய ஏற்பாட்டினை சரியாக நிதானித்து ஆராய்வோமானால் 260 அதிகாரங்கள் அடங்கிய 27 புத்தகங்களில் இரண்டு புத்தகங்கள் (அப்போஸ்தலர் நடபடிகள், 1 கொரிந்தியர்) மட்டுமே அந்நியபாஷை வரத்தைப் பற்றி கூறுவதை நாம் அறிந்து கொள்ள முடியும். அதாவது, அப்போஸ்தலர் 2, 10, 19 அதிகாரங்களும் 1 கொரிந்தியர் 12, 13, 14 அதிகாரங்களும் அந்நிய பாஷை வரத்தைப் பற்றி கூறுகிறது.

**கவனிக்கவும்**: மாற்கு எழுதின சுவிசேஷம் 16:17ல் நமது கர்த்தர் விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களில் ஒன்றாக "**நவமான பாஷைகளைப் பேசுவார்கள்**" என்று முன்னறிவித்தார்.

ஆனாலும் பெந்தெகொஸ்தே நாள்வரையிலும் இவை சம்பவித்ததாக ஒரு தெளிவும் இல்லை. அதனால் தான் முன்னறிவிக்கப்பட்ட இந்த வசனத்தை அல்லது மாற்கு சுவிசேஷத்தை, சம்பவங்கள் நிகழ்ந்ததும் அநேகராலே சாட்சியும் பகரப்பட்டதுமாய் இருக்கின்ற இரண்டு புத்தகங்களாகிய அப்போஸ்தலர் நடபடிகள் மற்றும் 1கொரிந்தியர் புத்தகங்களோடு சேர்த்து குறிப்பிடவில்லை.

நாம் இங்கே கவனிக்க வேண்டிய ஓர் உண்மை இருக்கிறது, அதாவது அப்போஸ்தலர் 2, 10, 19 அதிகாரங்களில் ஒரு குறிப்பிட்ட கூட்டத்தாரும் 1 கொரிந்தியர் 12, 13, 14 அதிகாரங்களில் கொரிந்து சபை விசுவாசிகளும் அந்நியபாஷையில் பேசியது முற்றிலும் உண்மை. ஆனால் அவர்கள் அன்று பேசியதால் **நாமும் இன்று பேச வேண்டுமா?** அன்று அவர்கள் **எப்படிப்பட்ட அந்நியபாஷை பேசினார்கள்?** இன்று பேசப்படுவது **வேதாகமத்தில் கூறப்படும் அந்நியபாஷைதானா?** இன்று நாம் அந்நியபாஷை பேசவேண்டு மென்கிற **கட்டளை வேதத்திலுண்டா?** இப்படிப்பட்ட கேள்விகளுக் கெல்லாம் சரியான பதில்களைத் தேடாமல், பெரோயா பட்டணத்து விசுவாசிகளைப்போல கேட்டதையும் கண்டதையும் அப்படியே கண்மூடித்தனமாக ஏற்றுக்கொள்ளாமல் காரியங்கள் இப்படி இருக்கிறதா என்று வேதவாக்கியங்களை, ஆராய்ந்து பார்க்காமல் (அப். 17:11), எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக் கொள்ளாமல் (1தெச.5:21) இன்று லட்சக்கணக்கானோர் அந்நியபாஷை வரத்தை நாடுவதையும் வாஞ்சிப்பதையும் காணும் போது வேதனையாகத்தான் இருக்கிறது.

இதை வாசிக்கிற நீங்கள் அந்நியபாஷை பேசுகிற ஒரு நபராக இருந்தாலும், இதுவரை அந்நியபாஷை வரத்தைக்குறித்துக் கேள்விப் படாதவராக இருந்தாலும், அல்லது அந்நியபாஷை வரத்தைக் குறித்துத் தெளிவாக அறிந்துகொள்ள வாஞ்சையுள்ளவர்களாக இருந்தாலும் இந்த சிறிய புத்தகம் உங்களுக்கு மெய்யாகவே பேருதவியாக இருக்கும். நாம் வேதாகமத்திலிருந்து மேற்கூறிய வினாக்களுக்கு விடைத்தேடி அந்நியபாஷையைக் குறித்து சரியான உபதேசத்தை அறிந்துகொள்வது மிக அவசியமாகும். இந்த புத்தகத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிற எல்லா வேதக் குறிப்புகளையும் பலமுறை வாசித்து ஆராய்ந்து பாருங்கள். தேவன் தாமே உங்களை சரியான வெளிச்சத்துக்குள் வழி நடத்துவாராக. ஆமென்

பிரியமானவர்களே, இந்த அந்நியபாஷை தலைப்பின் கீழ் கொடுக்கப்பட்டிருக்கிற விளக்கங்களையும் குறிப்பிடப்பட்டிருக்கிற வேத குறிப்புகளையும் குறித்து ஏதேனும் கூடுதலாக அறிய விரும்பினால், சத்தியத்தை சத்தியமாய் அறிந்துக் கொள்ள ஆவல் இருப்பின் உங்களுடைய அனைத்து சந்தேகங்களையும் வினாக் களையும் தயவு கூர்ந்து தயக்கமின்றி எனது மின்னஞ்சலுக்கு அனுப்பி வையுங்கள். உங்களுக்காக எழுதவும் ஜெபிக்கவும் கர்த்தருக்குள்ளாக கனிவுடன் காத்திருக்கிறேன்.

கிறிஸ்துவின் கிருபை உங்களோடு இருப்பதாக

**கிறிஸ்துவின் பணியில்**
**ஆ. திருமுருகன்**

மின்னஞ்சல் : atmurugan@gmail.com
கைப்பேசி : 07204227400

## பாகம் I

# அந்நியபாஷை என்றால் என்ன?

"**குளோசோலாலியா**" [glossolalia] என்கிற கிரேக்க பதத்தில் இருந்து "**அந்நியபாஷை**" என்கிற அர்த்தம் வருகிறது. "**குளோசா**" [glossa] என்றால் "**பாஷை**" என்றும் "**லாலியா**" [lalia] என்றால் "**பேசுதல்**" என்றும் பொருள்படும். அதாவது "குளோசோலாலியா" என்றால் அந்நியபாஷையில் அல்லது வேறே பாஷையில் அல்லது பற்பல பாஷையில் பேசுவது என்று பொருள்படும்.

"குளோசா" என்கிற பதம் புதிய ஏற்பாட்டிலே ஏறக்குறைய 50 முறை வருகிறது. யாக்கோபு 3:5 ல் வாசிப்பதுபோல உடலுறுப்பை (நாவு) சுட்டிக்காட்டுவதற்காக பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அப்.2:3 ல் (அக்கினிமயமான நாவுகள்) பரிசுத்த ஆவியானவர் இறங்கி வந்ததையும் கூடியிருந்த யாவர்மேலும் அமர்ந்ததையும் குறிப்பிடுவதற்காக பயன்படுத்தப்பட்டிருக்கிறது. மேலும் அப். 2:26 ல் உருவகமாக (என் நாவு களிகூர்ந்தது) பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே மேலே குறிப்பிட்டிருக்கிற மூன்று வேத பாகங்களை தவிர மீதமுள்ள அனைத்து வேத குறிப்புகளும் "பாஷை / மொழி" என்பதையே குறிக்கிறது.

நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து அந்நியபாஷை வரத்தைக்குறித்து முன்னறிவித்தபோது (நான்கு சுவிசேஷங்களில் ஒரு முறை மட்டும்), விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாக கூறியவற்றில் "நவமான பாஷைகளைப் பேசுவார்கள்" என்று கூறினார் (மாற்கு 16:17). பெயரடைச்சொல் [adjective] "**நவமான**" என்கிற பதம் "**கைனோஸ்**" [kainos] என்கிற கிரேக்க பதத்திலிருந்து வருகிறது. இதன் பொருள் அவர்கள் பேசப்போகிற பாஷைகள் அவர்களுக்கு புதியவைகள் என்பதாகும்; அதாவது அந்த புதிய பாஷைகளை அவர்கள் இதற்குமுன் பேசியதும் இல்லை கற்றதும் இல்லை. உதாரணமாக ரஷ்ய பாஷை எனக்கு நவமான/புதிய பாஷை என்று கூறும்போது, ரஷ்ய பாஷை என்றொரு பாஷை இருப்பதே எனக்கு தெரியாது என்கிற அர்த்தமல்ல; மாறாக எனக்கு ரஷ்ய பாஷையிலே பேசுவது புதிய அனுபவம் என்பதாகும். காரணம் எனக்கு ரஷ்ய பாஷை பேசத்தெரியாது, அதுமட்டுமல்ல, யாராவது ரஷ்ய பாஷையிலே பேசினால் அதை புரிந்து கொள்ளவும் முடியாது. அதே சமயம் தமிழ் பாஷையை என்னால் எழுதவும் படிக்கவும் புரிந்துகொள்ளவும் முடியும்.

அப். 2:4-ல் எழுத்தாளர் மருத்துவர் லூக்கா வேறுபட்ட பெயரடைச் சொல்லை பயன்படுத்துகிறார். அதாவது, "அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத்தொடங்கினார்கள்." இங்கே "**வெவ்வேறு**" என்கிற பதம் "**ஹெட்டேரோஸ்**" [heteros] என்கிற கிரேக்க பதத்தில் இருந்து வருகிறது. இவ்வார்த்தையின் பொருள் அவர்கள் தாங்கள் வழக்கமாக பேசுகிற பாஷையில் அல்லாமல் தங்களுடையது அல்லாத வேறு பாஷைகளில் பேசத் தொடங்கினார்கள் என்பதாகும். அவர்கள் வெவ்வேறு பாஷைகளில் பேசிய சந்தர்ப்பமும் இதை உறுதிப்படுத்துகிறது. அன்று பெந்தெ கொஸ்தே நாளில் கூடிவந்தவர்கள் இவர்கள் (பெந்தெகொஸ்தே நாளில் அந்நியபாஷைகளில் பேசினவர்கள்) வெவ்வேறு பாஷை களை பேசுவதைக் கேட்ட பொழுது ஆச்சரியப்பட்டதையும் மாறுத்திரம் மொழிந்ததையும் நன்றாய் கவனியுங்கள். *"எல்லாரும் பிரமித்து ஆச்சரியப்பட்டு, ஒருவரையொருவர் பார்த்து: இதோ, பேசுகிற இவர்களெல்லாரும் கலிலேயரல்லவா? அப்படியிருக்க, நம்மில் அவரவர்களுடைய ஜென்மபாஷைகளிலே இவர்கள் பேசக் கேட்கிறோமே, இதெப்படி?"* (அப். 2:7-8). ஒவ்வொருவரும் அவர் களுடைய சொந்த பாஷைகளிலே இவர்கள் பேசுவதை கேட்டார்கள் (அப். 2:6). இங்கே "**பாஷை**" என்கிற பதம் "**டையலெக்டோ**" [dialekto] என்கிற பதத்தின் மொழியாக்கமாகும். இதிலிருந்துதான் "**டையலெக்ட்**" என்கிற பதம் வருகிறது, பொருள் பேச்சுவழக்கில் உள்ள மொழி என்பதாகும்.

ஆகவே இரண்டு பதங்களாகிய "**குளோசா**" (*பாஷை அல்லது மொழி*) மற்றும் "**டையலெக்டோஸ்**" (*பாஷை அல்லது மொழி*) ஒரே பொருளுடைய பதங்காளாக பயன்படுத்தப்பட்டிருக்கிறது. தெளிவாக கூறுவோமானால், சீஷர்கள் அன்று பேச்சுவழக்கில் உண்டாயிருந்த அதே சமயம் தங்களுடையதல்லாத வேறே பாஷைகளிலே அல்லது மற்றவர்களுடைய பாஷைகளிலே பேசினார்கள்.

அப். 2:9-11 வரையுள்ள வசனங்களின் அடிப்படையில் பேசப்பட்ட எல்லா பாஷைகளும் கேட்டவர்களாலே புரிந்துகொள்ளப்பட்டதை நாம் அறிந்துகொள்ளலாம். மெய்யாகவே இது ஒரு வியக்கத்தக்க சம்பவம். அவர்கள் இந்த பாஷைகளை கற்றதில்லை; இதற்குமுன் பேசினதுமில்லை; ஆனாலும் அன்று பேசினார்கள். பரிசுத்த ஆவியாகிய தேவன் தாமே அவரவர்களுக்கு தந்தருளின பாஷைகளின்படியே அவர்கள் பேசினார்கள்.

இவ்விடத்திலே வெளிப்படுத்தின விசேஷத்தில் வருகிற "**பாஷை அல்லது பாஷைக்காரர்**" என்கிற பதத்தை மிக கவனமாக ஆராய்வது அவசியமாகும் (வெளி. 5:9; 7:9; 10:11; 11:9; 13:7; 14:6; 17:15). இங்கே "**பாஷை**" என்று வருகிற பதங்களெல்லாம் வெவ்வேறு நாடுகளில் கோத்திரங்களில் பேசப்படுகிற பாஷையைக் குறிக்கிறது. எந்த ஒரு தர்க்கமுமின்றி அனைவராலும் ஒருமனதாக இது ஒப்புக் கொள்ளப்படுகிறது. ஒருவரும் மாற்கு, அப்போஸ்தலர் நடபடிகள் மற்றும் வெளிப்படுத்தின விசேஷத்தில் கூறப்பட்டிருக்கிற பாஷை களைக் குறித்து கேள்வி எழுப்புவதில்லை. ஆனால் 1கொரிந்தியர் புத்தகத்தில் 12 முதல் 14 வரையுள்ள அதிகாரங்களில் ஏறக்குறைய 21 வேதக்குறிப்புகள் அடங்கிய "பாஷை" என்கிற பதத்தை புரிந்து கொள்வதிலும் வியாக்கியானம் செய்வதிலும் தான் எத்தனை எத்தனை குழப்பங்கள், மெய்யாகவே இது நமக்கு ஆச்சரியமாகத்தான் இருக்கிறது.

இன்று அந்நியபாஷையில் பேசுகிறேன் என்று சொல்பவர்களும் பேசுகிறவர்களை காண்கின்றவர்களும் பரவசமாகி மெய்மறந்த நிலையில் [ecstatic utterances] தங்களையே மறந்து பேசுகிற பாஷை; ஒருவருக்கும் தெரிந்திராத அதே சமயம் உலகின் எந்த பாகத்திலும், தேசத்திலும், மனித சமுதாயத்திலும் பேசப்படாத ஒரு பாஷை. இவர்கள் இப்படிப்பட்ட பாஷைக்கு கொடுக்கும் வேத ஆதாரம் தான் "**தெரியாத பாஷை**" [unknown tongues] 1கொரிந்தியர் 14:2, 4, 13, 14, 19 மற்றும் 27 (ஆங்கில வேதாகமத்தில் காணலாம்). ஆனால் மேற்கூறிய வசனங்களை வாசிக்கிற அல்லது தியானிக்கிற எந்த ஒரு வேத மாணவனும் [truth seekers] தவறாது கவனிக்க வேண்டிய விஷயம், "**தெரியாத**" [unknown] என்கிற பதம் வருகிற எல்லா இடங்களிலும் "வலப்பக்கம் சாய்ந்த அச்சுருப்படிவத்தை" [italicized letters] கொண்டு வருகிறது (இது தமிழ் வேதாகமத்திலே காண இயலாது மாறாக ஆங்கில வேதாகம மொழிப்பெயர்ப்புகளில் காண முடியும்). அச்சுருவம் இப்படி வருவதற்கு காரணம், இந்த பதம் மூலபாஷையாகிய கிரேக்கத்தில் இல்லை என்பதாகும். இந்த பதம் மூலபாஷையில் இல்லை என்றபோதிலும் மூலபாஷையில் இருந்து மொழிப்பெயர்த்த மொழிப்பெயர்ப்பாளர்கள் மூலமாக இவை சேர்க்கப்பட்டிருக்கின்றன. ஆகவே இங்கே சத்தியம் என்னவென்றால் பரிசுத்த ஆவியாகிய தேவன் அப்போஸ்தலனாகிய பவுலை அறியப்படாத, புரியாத அல்லது தெரியாத பாஷை என்று எழுதும்படி ஏவவில்லை அல்லது நடத்தவில்லை.

திறந்த மனதோடும் தெளிந்த புத்தியோடும் தேவனுடைய வார்த்தையை வாசித்து தியானிப்போமானால் பாஷை அல்லது பாஷைகள் என்கிற பதத்திற்கு 1 கொரிந்தியர் புத்தகத்தில் மட்டும் வேறு புதிய அர்த்தம் வருவதை நம்மால் காண இயலாது; அதை ஒப்புக்கொள்ளவும் நம் மனம் ஒத்துழைக்காது. மாற்கு எழுதின சுவிசேஷத்தில் நமதாண்டவர் முன்னறிவித்ததும், அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தில் சம்பவித்ததும், கொரிந்து சபையில் நடைமுறைப்படுத்தியதும் ஒன்றே. அதாவது எல்லா இடங்களிலும் வருகிற பாஷை அல்லது பாஷைகள் [tongues] என்கிற பதம் ஒரே அர்த்தத்தையே குறிக்கிறது.

இருப்பினும் எப்படி 1 கொரிந்தியரில் வருகிற அந்நியபாஷைக்கு மட்டும் அர்த்தம் மாறியது? வேதம் அனுமதிக்காத இந்த புதிய அர்த்தத்திற்கும் நடைமுறைப்படுத்துதலுக்கும் உரிமை [license] வழங்கியது யார்? இது மெய்யாகவே வியப்பாக தான் இருக்கிறது. அப்போஸ்தலனாகிய பவுல் உபயோகித்த (பயன்படுத்திய) அந்நியபாஷை என்கிற அனைத்து பதத்திற்கும் ஒரே பொருள் தான். அதோடு மட்டுமில்லாமல் பவுல் உபயோகித்த அந்நியபாஷை என்கிற பதம் வேற்று மொழி அல்லது அந்நிய மொழி [foreign languages] என்பதையே குறிக்கிறது. அதனால்தான் பவுல் 1 கொரிந்தியர் 14:9-10 ல், "**அதுபோல, நீங்களும் தெளிவான பேச்சை நாவினால் வசனியாவிட்டால் பேசப்பட்டது இன்னதென்று எப்படி தெரியும்? ஆகாயத்தில் பேசுகிறவர்களாயிருப்பீர்களே. உலகத்திலே எத்தனையோ விதமான பாஷைகள் உண்டாயிருக்கிறது, அவைகளில் ஒன்றும் அர்த்தமில்லாததல்ல**" என்று கூறுகிறார்.

ஆகையால் அந்நியபாஷையில் பேசுதல் என்கிற பெயரில் அர்த்தமற்ற சத்தத்தை உச்சரித்து உண்டாக்குவதும் அர்த்தமில்லாத வார்த்தைகளை பயன்படுத்தி ஒலி எழுப்புவதும் வேதத்திற்கு புறம்பானதும் வேதத்தில் கூறப்படாததும் வேதம் அனுமதிக்காதது மாகிய ஒரு செயலாகும். கிரேக்க பதம் "**லாலேயோ**" (laleo) என்பதின் அர்த்தம் "**நான் பேசுகிறேன்**" [I speak] என்பதாகும். இந்த பதம் ஒருபொழுதும் "**சப்தம்**" அல்லது "**ஒலி**" என்று பயன்படுத்தப்பட வில்லை. மேலும் இந்த பதம் முணுமுணுத்தலையோ, புரியாப் பேச்சையோ, தெளிவில்லாத பொருளற்ற ஒலியையோ [mumbling or muttering of unintelligible gibberish] குறிப்பிடவில்லை.

இதிலிருந்து தெளிவாகிற காரியத்தின் கடைத்தொகை இதுதான்: "புதிய ஏற்பாடு எடுத்துரைக்கிற அந்நியபாஷை என்பது மனிதர்கள் பேசியதும் அந்நாட்களில் பேச்சு வழக்கில் உண்டாயிருந்ததுமான பாஷைகளாகும். அல்லாமல் வேறொரு பாஷையைக் குறித்து குறிப்பிடவில்லை. இந்த உபதேசத்தை அல்லது சத்தியத்தை அல்லாத வேறே எந்த ஒரு விளக்கவுரையானாலும் அது அவரவர் சொந்த மனவிருப்பத்தின்படி (arbitrary) உண்டானதும், தேவனுடைய வார்த்தைக்கு அந்நியமானதுமாகும் (strange thing to the scriptures). முற்றிலும் புரிந்துகொள்ள இயலாத தொடர்பற்ற பேச்சை வேதம் ஒருநாளும் பொறுத்துக்கொள்வதில்லை (scripture never tolerates incoherent and incomprehensible babbling).

## எதற்காக அந்நியபாஷை வரம் கொடுக்கப்பட்டது?

அந்நியபாஷை வரம் அருளப்பட்டதற்கு ஏறக்குறைய இரண்டு நோக்கங்கள் உண்டு:

(1) **முதலாவதாக**, அந்நியபாஷை வரம் கொடுக்கப்பட்டதின் நோக்கம் "**சுவிசேஷ செய்தியைப் பகிர்ந்து கொள்வதற்காக**" (to communicate the message of the gospel). 1 கொரிந்தியர் 14-ஆம் அதிகாரத்தில் பவுல் அப்போஸ்தலன் இதை அருமையாக விளக்கி யிருக்கிறார் (1 கொரி. 14:22). தேவனுடைய சுவிசேஷத்தைப் பகிர்ந்துக் கொள்ள கொடுக்கப்பட்ட ஒரு அடையாளம் தான் அந்நியபாஷை வரம். ஏசாயா 28:11 மற்றும் யோவான் 20:30, 31 வசனங்கள் இதை உறுதிப்படுதுகிறது. இதையே தான் அப்போஸ்தலனாகிய பவுல் மீண்டும் எடுத்துரைத்து வலியுறுத்துகிறார்: *"மறுபாஷைக்காரராலும், மறு உதடுகளாலும் இந்த ஜனங்களிடத்தில் பேசுவேன்; ஆகிலும் அவர்கள் எனக்குச் செவி கொடுப்பதில்லையென்று கர்த்தர் சொல்லுகிறார் என்று வேதத்தில் எழுதியிருக்கிறதே"* (1 கொரி. 14:21). இங்கே பவுல் ஏசாயா தீர்க்கதரிசனத்தில் இருந்து இஸ்ரவேலருடைய வாழ்க்கையை சித்தரிக்கிறார். அதாவது சொந்த பாஷையிலே பேசின தங்களுடைய தீர்க்கதரிசிகளுக்கு செவிகொடுத்து தேவனுடைய வார்த்தைக்கு கீழ்படியாத இஸ்ரவேல் ஜனத்தோடு; *"பரியாச உதடுகளினாலும் அந்நியபாஷையினாலும் இந்த ஜனத்தோடே பேசுவார்"* என்று ஏசாயா தீர்க்கதரிசி மூலமாக கர்த்தர் முன்னறி வித்தார் (ஏசாயா 28:11). எனவேதான் எவ்வித சந்தேகமுமின்றி பவுல் அந்நியபாஷையில் பேசுவதை இஸ்ரவேல் ஜனத்திற்கு கொடுக்கப்

பட்ட அடையாளமாகப் பார்க்கிறார். “இந்த ஜனத்தோடே” என்று குறிப்பிட்டது இஸ்ரவேல் ஜனத்தை மட்டுமே குறிக்கிறது.

**கவனிக்கவும்**: அன்று கொரிந்து சபையில் அந்நியபாஷையைக் குறித்தோ அல்லது அந்நியபாஷையில் பேசுவதைக் குறித்தோ குழப்பம் உண்டாகவில்லை; மாறாக அவர்கள் கடைபிடித்த விதத்திலும், செயல்முறைப்படுத்தின விதத்திலும், ஒழுங்குமுறையிலும் தான் குழப்பங்கள் ஏற்பட்டன.

இரண்டாவது முறை அந்நியபாஷையில் பேசின சம்பவத்தை அப். 10:46-ல் லூக்கா குறிப்பிடுகிறார். இங்கும் புறஜாதிகள் (கொர்நேலியுவும் அவனது வீட்டாரும்) அந்நியபாஷையில் பேசினது யூதர்களுக்கு (பேதுரு மற்றும் அவனோடு சென்றவர்கள்) அடையாளமாக கொடுக்கப்பட்டது. பேதுரு இதைக்குறித்து பின்பு சாட்சியளிக்கிறார்; “நான் பேசத்தொடங்கினபோது, பரிசுத்த ஆவியானவர் ஆதியிலே நம்மேல் இறங்கினதுபோல, அவர்கள் மேலும் இறங்கினார்” (அப். 11:15). எனவே எவ்வித சந்தேகமுமின்றி கொர்நேலேயு வீட்டிலே அந்நியபாஷையிலே பேசின சம்பவம், பேதுரு சுவிசேஷம் பகிர்ந்துகொண்ட வேளையிலே யூதர்களுக்கு அடையாளமாக கொடுக்கப்பட்டது (அப். 10:44-46).

மூன்றாவது முறையாக அப். 19:6 ல் அந்நியபாஷையிலே பேசின சம்பவம் வருகிறது. மீண்டும் இங்கே அந்நியபாஷையில் பேசுவது சுவிசேஷத்தோடும் அதைப்பகிர்ந்துகொள்வதோடும் [missionary and evangelistic purpose] ஒத்து வருவதை காண முடியும். யோவான் ஸ்நானனுடைய சீஷர்களின் விசுவாசத்தில் இங்கே தெளிவாக புரிந்து கொள்ள கூடிய சத்தியம்: “இரட்சிப்பிற்கு ஏதுவான விசுவாசம் ஒன்று உண்டு என்பதும், இவர்களுடைய விசுவாசம் இரட்சிப்புக்குள்ளாக வழிநடத்தவில்லை என்பதுமாகும்.” எனவே சந்தேகமின்றி இங்கும் சுவிசேஷத்தைப் பகிர்ந்து கொள்வதற்காக கொடுக்கப்பட்ட அடையாள வரம் தான் இந்த அந்நியபாஷை.

(2) **இரண்டாவதாக**, அந்நியபாஷை வரம் கொடுக்கப்பட்டதின் நோக்கம் “**சுவிசேஷ செய்தியை உறுதிப்படுத்துவதற்காக**” [to confirm the message of the gospel]. தேவனுடைய சுவிசேஷத்தைப் பகிர்ந்துக் கொள்வதற்காக கொடுக்கப்பட்ட ஒரு அடையாள வரம் மட்டுமல்ல மாறாக சுவிசேஷ செய்தியை உறுதிப்படுத்துவதற்காகவும் கொடுக்கப்பட்டதுதான் இந்த அந்நியபாஷை வரம்.

இன்று நமக்கு இருக்கிறதுபோல அல்லது கிடைத்திருக்கிறதுபோல பூர்த்தியாக்கப்பட்ட பரிபூரணமான தேவனுடைய வார்த்தை [the

completed word of God] அன்று ஆதி அப்போஸ்தலர் காலத்தில் இல்லை, அதாவது கி.பி. 100 ஆம் ஆண்டு வரை. காரணம் ஏறக்குறைய கி.பி. 100 ஆம் ஆண்டின் காலகட்டத்தில் வெளிப் படுத்தின விசேஷம் எழுதியாகிவிட்டது. அதனால் தான் அப்போஸ் தலர்களுக்கு அடையாள வரங்கள் கொடுக்கப்பட்டது [sign gifts]. ஆதித்திருச்சபையின் அப்போஸ்தலர்களும் பிற விசுவாசிகளும் (உதாரணம்: கொரிந்து சபை விசுவாசிகள்) தேவனுடைய சுவிசேஷ வசனத்தை பிரசங்கித்த வேளைகளிலெல்லாம் அடையாளங்களும் அற்புதங்களும் பின் தொடர்வதை நம்மால் வாசிக்க முடியும். மத்தேயு 12:38, 16:1, யோவான் 2:18; 6:30, மாற்கு 16:20, 1 கொரி. 1:22, 2 கொரி. 12:12 மற்றும் எபிரெயர் 2:3, 4 ஆகிய வேதவாக்கியங்கள் இதை தெள்ளத் தெளிவாக்குகிறது.

## வேதத்திலே அந்நியபாஷையில் யார் பேசினார்கள்?

நாம் கர்த்தருடைய வேதத்தை கவனத்தோடு வாசித்து ஆராய்வோமானால், புதிய ஏற்பாட்டிலே ஏறக்குறைய நான்கு இடங்களில் அந்நியபாஷையில் பேசினதை நம்மால் அறிந்துக் கொள்ளமுடியும். அந்த நான்கும் கீழ்வருமாறு:

1. பன்னிரண்டு அப்போஸ்தலர்கள் (அப். 2:1-13)
2. கொர்நேலியு மற்றும் வீட்டார் (அப். 10:44-46)
3. யோவான்ஸ்நானனுடைய 12 சீஷர்கள் (அப். 19:1-7)
4. கொரிந்து சபையார் (1 கொரி. 12-14 அதிகாரங்கள்)

## அந்நியபாஷையை குறித்த தவறான கருத்துக்கள்

அந்நியபாஷையிலே பேசுகிறோம் என்று கூறும் கூட்டத்தின ரையோ அல்லது அந்த சபை போதகரையோ எதற்காக நீங்கள் அந்நியபாஷையிலே பேசுகிறீர்கள் என்று நாம் கேட்போமானால் அதற்கு அவர்கள் கூறும் பதில்கள் ஏராளம். இங்கே அவைகள் எல்லாவற்றையும் எடுத்துக்கூற வேண்டிய அவசியமில்லை, அவை களிலிருந்து சிலவற்றை மட்டும் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

### 1. பரிசுத்த ஆவியானவருடைய ஞானஸ்நானம்

அந்நியபாஷையில் பேசுவது பரிசுத்த ஆவியானவருடைய ஞானஸ்நானத்தை பெற்றதன் அடையாளம் என்று கூறுவது. இது வேதத்திலே கூறப்படாத ஒரு உபதேசமாகும். 1 கொரிந்தியர் 12:13-ல் *"நாம் யூதராயினும், கிரேக்கராயினும், அடிமைகளாயினும், சுயாதீன ராயினும், எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டு, எல்லாரும் ஒரே ஆவிக்குள்ளாகவே தாகந்தீர்க்கப்பட்டோம்."* என்று பவுல் அப்போஸ்தலர் மிகத் தெளிவாக கூறியிருக்கிறார். இங்கே ஒரே சரீரம் என்பது சபையை குறிக்கிறது (எபேசியர் 4:12; 5:23), ஒரே ஞானஸ்நானம் என்பது இரட்சிக்கப் படுதலைக் குறிக்கிறது (1 கொரிந்தியர் 12:13). அதாவது ஆவியான வருடைய கண்டித்து உணர்த்துதலுக்கு (யோவான் 16:7-11) செவி கொடுத்து, சுவிசேஷ வசனத்தை ஏற்றுக்கொண்டு இரட்சிக்கப் பட்டவர்கள் (எபேசியர் 1:13, 14) இயேசு கிறிஸ்துவினுடைய ஒரே சரீரமாகிய சபையிலே இணைக்கப்படுகிறார்கள் (அப்போஸ்தலர் 2:47).

எனவே இரட்சிக்கப்பட்ட எல்லா விசுவாசிகளும் இந்த ஆவியானவருடைய ஞானஸ்நானத்தைப் பெற்றவர்கள் தான் என்பதில் சிறிதளவும் சந்தேகமில்லை. அதே நேரத்தில் இரட்சிக்கப்பட்ட, ஆவியானவருடைய ஞானஸ்நானத்தைப் பெற்ற எல்லா விசுவாசிகளும் அந்நியபாஷையில் பேசினதை நாம் வாசிப்பதில்லை. அப்படி எல்லாரும் பேசவில்லை என்பது வேதத்திலே தெளிவாகிறது (1 கொரிந்தியர் 12:30). ஆகையால் அந்நியபாஷையில் பேசுவது பரிசுத்த ஆவியானவருடைய ஞானஸ்நானத்தை பெற்றதன் அடையாளம் என்று கூறுவது முற்றிலும் தவறானதும் வேதத்திலே கூறப்படாததுமான போதனையாகும்.

### 2. பரிசுத்த ஆவியானவரின் நிறைவு

அந்நியபாஷையில் பேசுவது பரிசுத்த ஆவியானவராலே நிரப்பப்படுதலின் அடையாளம் என்று கூறுவது. நாம் பரிசுத்த ஆவியானவரின் நிறைவைக் குறித்து வேதத்திலே சரியாக வாசித்து நிதானித்து தியானிப்போமானால், மறுக்கமுடியாத ஒரு சத்தியம் வெளிப்படும். அதாவது இரட்சிக்கப்பட்ட அனைத்து விசுவாசிகளும் ஆவியினாலே நிறைந்து காணப்பட வேண்டும் என்கிற கட்டளை கொடுக்கப்பட்டிருப்பதே அந்த உண்மை (எபேசியர் 5:18). ஆனால் இரட்சிக்கப்பட்ட அனைத்து விசுவாசிகளும் அந்நியபாஷையிலே பேச வேண்டும் என்கிற கட்டளை கொடுக்கப்படவில்லை. அது

மட்டுமல்ல பரிசுத்த ஆவியினாலே நிறைந்த பொழுதெல்லாம் அந்நியபாஷையிலே பேசினார்கள் என்று வேதம் ஒரு போதும் கூறுவதில்லை (அப். 4:31; 13:9-11).

மேலும் பரிசுத்த ஆவியானவரின் நிறைவைப் பெறுகிற ஒவ்வொரு விசுவாசியும் எவைகளை செய்ய வேண்டுமென்கிற மூன்று காரியங்களைக் குறித்துக் கட்டளைப்பிறப்பிக்கபட்டிருக்கிற அதே வேதப்பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது பரிசுத்த ஆவி யானவரின் நிறைவைப் பெற்ற ஒரு விசுவாசி தன் இருதயத்தில் *கர்த்தரைப் பாடி கீர்த்தனம் பண்ணவேண்டும், ஸ்தோத்திரம் பண்ண வேண்டும், கீழ்ப்படிய வேண்டும்* (எபேசியர் 5:18-21). இதுவே பரிசுத்த ஆவியானவரின் நிறைவைப் பெற்றதின் அடையாளம். ஆகையால், அந்நியபாஷையில் பேசுவது பரிசுத்த ஆவியானவராலே நிரப்பப் படுதலின் அடையாளம் என்று கூறுவது வேதத்திற்கு புறம்பானதும் எதிர்மறையானதுமாகும்.

### 3. ஆவியின் கனி

அந்நியபாஷையில் பேசுவது ஆவியின் கனியைப் பெற்றதின் அடையாளம் என்று கூறுவது. பரிசுத்த ஆவியானவரின் நிறைவைப் பெற்றவர்கள் தங்களுடைய அனுதின கிறிஸ்தவ வாழ்க்கையிலே ஆவியின் கனியை வெளிப்படுத்த வேண்டும் அல்லது ஆவியின் கனியை உடையவர்களாக வாழ வேண்டும். கலாத்தியர் 5:22-23-ல் ஆவியின் கனியைக் குறித்தும் அதினுடைய ஒன்பது குணங்களை குறித்தும் கூறப்பட்டிருக்கிறது. அதாவது, எல்லா விசுவாசிகளும் ஆவியிலே நிறைந்து காணப்பட வேண்டும், அதே போல ஆவியிலே நிறைந்த ஒவ்வொரு விசுவாசியும் ஆவியின் கனியையும் தங்கள் வாழ்க்கையிலே வெளிப்படுத்த வேண்டும். ஆகையால், அந்நியபாஷையில் பேசுவது ஆவியின் கனியைப் பெற்றதின் அடையாளம் என்று கூறுவது வேதத்திற்கு புறம்பானதும் எதிர்மறையானதுமாகும்.

### 4. விசுவாசத்தின் அடையாளம்

அந்நியபாஷையில் பேசுவது விசுவாசத்தின் அடையாளம் என்று கூறுவது. விசுவாசிகளாகிய நாம் தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்கிறோம் என்று 2 கொரிந்தியர் 5:7-ல் அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகிறார். அடையாளங்களையும், அற்புதங்களையும் மற்றும் வரங்களையும் நாடித்தேடும் ஒவ்வொரு தேவனுடையபிள்ளையும்

காண்பிப்பது விசுவாசத்தையல்ல அவிசுவாசத்தையேயாகும். அடையாள வரங்களை நாடிப் போகக் கூடிய செயல் ஒரு விசுவாச வாழ்க்கையைக் காண்பிப்பது அல்ல, மாறாக அவிசுவாச வாழ்க்கையையே காண்பிக்கிறது. மேலும் நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தோமாவுக்கு கற்பித்த பாடம் இன்றும் அடையாளங்களை நாடிப் போகக் கூடிய ஒவ்வொருவருக்கும் ஓர் நல்ல உதாரணம் ஆகும் (யோவான் 20:24-29). ஆக அந்நியபாஷை வரம் கூட விசுவாசிகளுக்கு அடையாளமாகக் கொடுக்கப்பட்ட ஒரு வரம் அல்ல மாறாக அவிசுவாசிகளுக்கு அடையாளமாகக் கொடு க்கப்பட்டதாகும் (1 கொரி. 14:22). ஆகையால், அந்நிய பாஷையில் பேசுவது விசுவாசத்தின் அடையாளம் என்று கூறுவது வேதத்திற்கு புறம்பானதும் எதிர்மறையானதுமாகும்.

இன்னும் எடுத்துரைப்பதற்கு அநேகம் உள்ளன. ஆனாலும் மேலே கொடுக்கப்பட்டிருக்கிற நான்கும் போதுமானவைகள்.

**குறிப்பு**: நான்காம் பாகத்தில், *அரிதானாலும் அறிந்துக்கொள்ள வேண்டியவைகள்* என்கிற தலைப்பின்கீழ் சில இன்றியமையாத கேள்விகளுக்கு வேதத்தின் அடிப்படையில் விளக்கங்கள் கொடுக்கப் பட்டிருக்கின்றன. அவைகளை நீங்கள் வாசிக்கும்போது, அந்நிய பாஷையைக் குறித்ததான இன்னும் அநேக கேள்விகளுக்கு (தவறான கருத்துக்களுக்கு) உரிய வேதப்பூர்வமான விளக்கங்களை அறிந்து கொள்ளலாம்.

**பாகம் II**

# அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில் அந்நியபாஷை

அந்நியபாஷையில் பேசினதைக் குறித்து அருமையான மிகத்தெளிவான வரலாற்றுச் சம்பவம் அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்புத்தகத்தின் எழுத்தாளராகிய மருத்துவர் லூக்கா அந்நியபாஷையில் பேசினதைக் குறித்த மூன்று சம்பவங்களை குறிப்பிடுகிறார். முதலாவதாக, இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்து பரமேறிச்சென்றதில் இருந்து 50 வது நாள் எருசலேமில் நிகழ்ந்த சம்பவம். இரண்டாவதாக, ஏழு வருடம் கடந்த பிறகு செசரியாவில் உள்ள கொர்நேலேயு வீட்டில் நிகழ்ந்த சம்பவம். மூன்றாவதாக, மீண்டும் 13 வருடம் கடந்த பிறகு எபேசு பட்டணத்திலே நிகழ்ந்த சம்பவம்.

**கவனிக்கவும்**: இந்த மூன்று சம்பவங்களும் வரலாற்றுச் சுவடுகளாக பரிசுத்த ஆவியானவராலே நிகழ்த்தப்பட்டவைகள். ஆனால் கொரிந்து சபையில் நாம் காண்பது, விசுவாசிகளாலே நடைமுறைப்படுத்தப்பட்ட அல்லது செயல்படுத்தப்பட்ட (practice of speaking in tongues among the believers in this city) அந்நியபாஷை வரமாகும்; அதுவும் துற்பிரயோகம் ((முரணான நிலையில்) செய்யப்பட்டது.

| வசனங்கள் | பேசியவர்கள் | கேட்டவர்கள் | நோக்கம் |
|---|---|---|---|
| 2:1-13 | அப்போஸ்தலர்கள் | அவிசுவாசிகளான யூதர்கள் | கிறிஸ்துவைப் பற்றிய பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதல் |
| 10:34-46 | கொர்நேலியு மற்றும் அவனது வீட்டார் | பேதுரு மற்றும் அவனோடு சென்றவர்கள் | புறஜாதியாரையும் கர்த்தர் சபையிலே அங்கமாக்கியதன் வெளிப்பாடு |
| 19:1-7 | யோவான் ஸ்நானனுடைய 12 சீஷர்கள் | பவுல் அப்போஸ்தலன் | பிரசங்கித்த வசனத்தை உறுதிப்படுத்தல் |

## எருசலேம் பட்டணம் (2:1-13)

நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த நாளில் இருந்து சரியாக 50-வது நாள் அல்லது பரமேறிச்சென்ற நாளில் இருந்து 10-வது நாள், அதாவது பெந்தெகொஸ்தே நாளில் சீஷர்கள்

ஒருமனப்பட்டு ஓரிடத்திலே கூடியிருந்தபொழுது சடுதியாய் (எதிர்பாராமல்) வானத்திலிருந்து ஒரு முழக்கம் உண்டானது, அது பலத்த காற்று அடிக்கிறதுபோல இருந்தது. அப்பொழுது அக்கினி மயமான நாவுகள்போலப் பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்கு காணப்பட்டது, மட்டுமல்ல, அவர்கள்மேல் வந்து அமர்ந்தது. பிறகு தேவனுடைய ஆவியானவரின் வல்லமையினாலும் தங்களுக்கு தந்தருளின வரங்களினாலும் நிறைந்தவர்களாய் ஆவியானவர் அவர்களுக்கு தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே அதாவது தாங்கள் கற்றறிந்திராத [dialects they had never learned] பாஷைகளில் பேசத்தொடங்கினார்கள் (அப். 2:1-4).

இந்த அற்புதமான சம்பவம் பெந்தெகொஸ்தே பண்டிகை ஆசரிக்கும்படி ஏறக்குறைய 15 தேசங்களில் இருந்து வந்திருந்த திரளான ஜனங்களின் கவனத்தை வெகுவாக ஈர்த்தது; உடனே சத்தம் உண்டான திசை நோக்கி எல்லோரும் அங்கே கூடி வந்தார்கள். கூடியிருந்தவர்களுடைய பாஷையிலே சீஷர்கள் பேசினபடியினாலே, கேட்டவர்கள் ஒருவரையொருவர் பார்த்து பிரமித்து ஆச்சரியப் பட்டார்கள்.

## செசரியா பட்டணம் [10:44-48; 11:15-18]

செசரியா பட்டணத்திலே இத்தாலியா பட்டாளம் என்னப்பட்ட ரோம பட்டாளத்தில் நூற்றுக்கு அதிபதியாக இருந்த கொர்நேலியு என்பவனின் வீட்டிலே நடந்த சம்பவம் தான் அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில் இரண்டாவது முறையாக அந்நியபாஷையில் பேசின சம்பவம். இந்த கொர்நேலியு ஒரு புறஜாதியான், யூதனல்ல. இந்த சம்பவம் ஏறக்குறைய கி.பி. 38 ஆம் ஆண்டு நிகழ்ந்ததாகும். பெந்தெகொஸ்தே நாளினைப்போலவே இங்கும் பிரசங்கம் செய்தது அப்போஸ்தலனாகிய பேதுரு. பேதுரு பேசிக் கொண்டிருக்கும் பொழுது வசனத்தை கேட்டுகொண்டிருந்த கொர்நேலியு மற்றும் கூடியிருந்த யாவர்மேலும் பரிசுத்த ஆவியானவர் இறங்கினார். அதன் விளைவாக அவர்கள் பல பாஷைகளைப் பேசி தேவனை புகழ்ந்தார்கள் (அப். 10:44).

அந்த வேளையில் பேதுருவோடு கூட வந்தவர்கள் யாவரும் இதைக்கண்டு பிரமித்தார்கள். காரணம் பெந்தெகொஸ்தே நாளில் சம்பவித்தது யூதர்களுக்கு மாத்திரம்தான், ஆனால் இங்கே புறஜாதி களும் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையையும் வரத்தையும் பெற்று பற்பல பாஷைகளைப் பேசினார்கள் (அப். 10:45-46). இது மெய்யாகவே யூதர்களுக்கு பிரமிப்புதான். இந்த பிரமிப்பு இங்கேயே இருந்துவிட

வில்லை, மாறாக எருசலேம் வரை சென்றது. ஆம் செசரியாவில் நிகழ்ந்த இந்த சம்பவம் யூதேயாவிலிருக்கிற அப்போஸ்தலரும் சகோதரரும் கேள்விப்பட்டார்கள். பேதுரு அப்போஸ்தலன் இந்த சம்பவத்தை 11-ஆம் அதிகாரத்தில் விவரிக்கிறார்: *"நான் பேசத் தொடங்கினபோது, பரிசுத்த ஆவியானவர் ஆதியிலே (பெந்தெகொஸ்தே நாளில்) நம்மேல் இறங்கினது போலவே, அவர்கள் மேலும் (கொர்நேலியு வீட்டில் கூடியிருந்தவர்கள்) இறங்கினார்"* (அப். 11:15).

**கவனிக்கவும்**: புறஜாதிகளும் தேவனாலே ஏற்றுக்கொள்ளப் பட்டார்கள் என்றும் புறஜாதிகளையும் தேவன் பாரபட்சமின்றி சபையிலே அங்கமாகும்படி செய்தார் என்றும் யூதர்கள் அறிந்துக் கொள்ளும்படியாக தேவன் தமது ஆவியானவர் மூலமாக இந்த சம்பவத்தை நிகழச்செய்தார். அதாவது புறஜாதிகள் அந்நிய பாஷையிலே பேசினது யூத கிறிஸ்தவர்களுக்கு அடையாளமாக கொடுக்கப்பட்டது.

## எபேசு பட்டணம் (19:1-7)

எபேசு பட்டணத்திலே நிகழ்ந்த இந்த சம்பவமானது கொர்நேலியு வீட்டில் நிகழ்ந்த சம்பவத்திற்கு பிறகு ஏறக்குறைய 13 ஆண்டு களுக்குப் பிறகு கி.பி. 51-ஆம் ஆண்டு நிகழ்ந்ததாகும். அப்போஸ் தலனாகிய பவுல் எபேசு பட்டணத்திற்கு சென்ற சமயத்தில் யோவான் ஸ்நானனுடைய ஞானஸ்நானம் மட்டும் பெற்றிருந்த அவனுடைய சீஷர்களாகிய 12 பேரை கண்டார். அவர்கள் பரிசுத்த ஆவியைக் குறித்தும், இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே பெறுகிற ஞானஸ்நானத்தை குறித்தும் அறியாமலி ருந்தார்கள்.

இதை அறிந்த பவுல் அவர்களுக்கு இயேசு கிறிஸ்துவில் பெற வேண்டிய ஞானஸ்நானத்தை குறித்தும் இயேசுவில் உண்டாயிருக்கிற பாவமன்னிப்பாகிய மீட்பை குறித்தும் பரிசுத்த ஆவியைப் பெறுவதைக்குறித்தும் உபதேசித்தான். அதைக்கேட்டபோது அவர்கள் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றார்கள். அதன்பின்பு பவுல் அவர்கள்மேல் கைகளை வைத்தபோது, பரிசுத்த ஆவி அவர்கள்மேல் வந்தார். அதன் விளைவாக அவர்கள் அந்நியபாஷைகளைப் பேசித் தீர்க்கதரிசனஞ் சொன்னார்கள் (அப். 19:4-6).

## சிந்திக்க வேண்டியவைகள்:

- அன்று அவர்கள் பேசிய அந்நியபாஷைகள் அப்போஸ்தர்கள் காலக்கட்டத்திலே பேச்சுவழக்கில் இருந்த பாஷைகள் (2:6-8).
- அன்று அந்நியபாஷைகளிலே பேசினதை கேட்ட வெவ்வேறு பாஷைகளை சேர்ந்தவர்கள் எல்லாரும் பிரமித்து சந்தேகப்பட்டு, இதென்னமாய் முடியுமோ என்று ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டார்கள் (2:12). காரணம் அந்நியபாஷையிலே பேசினதை அவர்கள் புரிந்துக் கொண்டார்கள்.
- அன்று அந்நியபாஷைகளிலே பேசினவர்கள் அனைவரும் தேவனுடைய மகத்துவங்களைப் பேசினார்கள் (2:11).
- அன்று அவர்கள் அந்நியபாஷைகளிலே பேசினபோது மொழிப்பெயர்ப்பாளருடைய அவசியம் இல்லாதிருந்தது (2:6,11,12).
- அன்று அந்நியபாஷைகளிலே பேசினவர்கள் தேவனோடல்ல மனுஷர்களோடு தேவனுடைய மகத்துவத்தைக் குறித்துப் பேசினார்கள் (2:11).
- அன்று பெந்தெகொஸ்தே நாளில் கூடியிருந்தவர்கள் யாவரும் வெளியரங்கமான அடையாளங்களையும் சத்தத்தையும் கேட்டார்கள் (2:2-4).
- அன்று அந்நியபாஷைகளிலே பேசினவர்கள் தேவனைப் புகழ்ந்தார்கள் (10:46).
- அன்று அந்நியபாஷைகளிலே பேசினவர்கள் தீர்க்கத்தரிசனஞ் சொன்னார்கள் (19:6).
- அன்று அந்நியபாஷைகளிலே பேசினவர்கள் பிரசங்கித்த பிறகு ஏறக்குறைய 3000 பேர் இரட்சிக்கப்பட்டார்கள் (2:41).
- அன்று அந்நியபாஷைகளிலே பேசினவர்கள் யாவரும் ஆண்கள் மட்டுமே, பெண்கள் பேசவில்லை (2:22, 37; 19:5-7).

அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில் பேசப்பட்ட அந்நியபாஷையும் இப்போது பேசப்படுகிற அந்நியபாஷையும் ஒன்றல்ல என்பதும் இரண்டிற்கும் இடையில் அநேக வேறுபாடுகள் உண்டென்பதும் இதிலிருந்து தெளிவாகிறது. அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தில் காணப்படுகிற அந்நியபாஷைக்கும் இன்று பேசப்படுகிற அந்நியபாஷைக்கும் உள்ள வேறுபாட்டினை கீழே குறிப்பிடுகிறேன், கவனமாக வாசித்து தியானியுங்கள்:

# அந்நியபாஷை: அன்றும் இன்றும்

| அப்போஸ்தலர் நடபடிகள் | இன்று |
|---|---|
| அன்று பேசப்பட்டது அக்காலத்தில் பேச்சுவழக்கில் உண்டாயிருந்த பாஷைகள் (2:6,7,8) | பேச்சு வழக்கில் இல்லை. அதற்கான சான்றுகளும் இல்லை |
| கேட்டவர்கள் யாவரும் புரிந்து கொண்டார்கள் (2:6,7,8,12) | கேட்பவர்களாலே புரிந்துகொள்ள முடியவில்லை |
| கேட்டவர்கள் ஆச்சரியப்பட்டு, பிரமித்தார்கள் (2:12; 10:46) | கேட்கிறவர்கள் ஆச்சரியப்பட்டு, குழம்பி போகிறார்கள் |
| தேவனுடைய மகத்துவங்களைப் பேசினார்கள் (2:11) | அர்த்தம் தெரியவில்லை. புரிந்துகொள்ளமுடியவில்லை |
| பேசினவர்கள் கேட்டவர்களோடு தேவனுடைய செய்தியைப் பகிர்ந்து கொண்டார்கள் (2:11) | பேசுகிறவர்கள் அவ்வாறாக எந்த செய்தியையும் பகிர்ந்து கொள்வதில்லை |
| மொழிப்பெயர்ப்பாளர் அவசியம் இல்லை காரணம் கேட்டவர்கள் யாவரும் புரிந்து கொண்டார்கள் (2:6,7,8) | இன்று பேசப்படும் பாஷையை யாரும் புரிந்துக்கொள்ளமுடியவில்லை. அது மட்டுமல்ல இன்று மொழிபெயர்க்க மொழிப்பெயர்ப்பாளர்களும் இல்லை. |
| வெளியரங்கமான அடையாளம் உண்டாயிருந்தது (2:2,3) | அடையாளம் ஏதும் இல்லை |
| பலத்த காற்றடிக்கிற முழக்கம் உண்டாயிருந்தது (2:2) | அப்படிப்பட்ட அடையாளம் இன்று இல்லை. |
| தேவனைப் புகழ்ந்தார்கள் (10:45) | என்ன செய்கிறார்கள் என்பது புலப்பட வில்லை. அறிந்துக் கொள்ளவும் முடிய வில்லை. |
| அவிசுவாசிகளான யூதர்கள் முன்பாக பேசினார்கள் (2:41) | பெரும்பாலும் விசுவாசிகள் முன்பாகப் பேசுகிறார்கள் (சபையின் ஆராதனை, ஜெபக்கூட்டம் ஆகியவை) |
| ஆண்கள் மட்டுமே பேசினார்கள் (2:22,37) | ஆண்களும் பெண்களுமாக சபை மக்கள் முழுவதும் பேசுகிறார்கள் |

## பாகம் III

## கொரிந்து சபையில் அந்நியபாஷை (12-14)

ஏறக்குறைய கி.பி. 53 ஆம் ஆண்டு அப்போஸ்தலனாகிய பவுல் எபேசு பட்டணத்திலே இருந்த நாட்களில், கொரிந்து சபையிலே அநேக பிரச்சனைகள் எழுந்துள்ளதையும் அவர்களுடைய ஒழுங்கற்ற நடைமுறை வாழ்க்கையையும் குறித்துக் கேள்விப்பட்டார். (சில வருஷங்களுக்கு முன்புதான் பவுல் செய்த சுவிசேஷ ஊழியத்தின் பலனாக கொரிந்து பட்டணத்தில் சபைக்கூடி வருதல் ஆரம்பிக்கப்பட்டது.) அப்படி ஏற்பட்ட அநேக பிரச்சனைகளில் ஒன்றுதான் முரண்பாடான விதத்திலே ஒழுங்கின்மையோடு ஆசரிக்கப்பட்ட ஆவியின் வரங்களுக்குள் ஒன்றான அந்நியபாஷை வரம். அவர்கள் வேதம் உரைக்கிற விதத்திலே ஆசரிக்காமல் போனதுதான் இவ்வளவு குழப்பத்திற்கும் காரணம்.

**கவனிக்கவும்**: புறச்சமயப்பிரகாரமான அநேக ஆசாரங்களினால் மலிந்து கிடந்த ஒரு பட்டணம் தான் கொரிந்து பட்டணம். அதனால் அங்கு அன்றைய நாட்களில் அந்நியபாஷை என்கிற பெயரில் புறச்சமய ஆசாரங்களின் வழியைத் தழுவி ஒருவரும் புரிந்து கொள்ள இயலாத சப்தத்தை எழுப்பி கேட்டவர்களையும், கூடியிருந்தவர்களையும் பெருங்குழப்பத்திற்குள்ளாக்கியிருக்கலாம், எனவே நாம் இதில் ஆச்சர்யப்படுவதற்கு அவசியம் இல்லை. கொரிந்து சபையிலே ஏற்பட்ட குழப்பத்திற்கு காரணம் அவர்களுடைய பாஷையும் எழுப்பின ஒலியும் ஆவிக்குரிய பிரகாரம் இருக்கவில்லை மாறாக மனோதத்துவமானது (not spiritual rather psychological).

அப்படியானால், அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிற அந்நியபாஷைக்கும் கொரிந்து சபையிலே பேசப்பட்ட அந்நியபாஷைக்கும் ஏதேனும் வேறுபாடு உண்டா? ஆம் சில வேறுபாடுகள் உண்டு. குறிப்பாக இரண்டு வேறுபாடுகளை நாம் காண முடியும்.

**முதலாவதாக**, நான் ஏற்கனவே குறிப்பிட்டதுபோல, அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில் ஏறக்குறைய 20 ஆண்டுகள் இடைவெளியில் அதாவது இடைப்பட்ட காலங்களில் மூன்று சம்பவங்கள் நிகழ்வதை காணலாம் (இதை நான் இரண்டாம் பகுதியில்

குறிப்பிட்டிருக்கிறேன்). ஆனால் கொரிந்து சபையிலே தங்களது எல்லா சபை கூடிவரவிலும் கைக்கொள்ளப்பட்ட ஒரு நடைமுறை செயலாகத் தான் [regular practice in church services] அந்நியபாஷையில் பேசுதல் கடைப்பிடிக்கப்பட்டது.

**இரண்டாவதாக**, அன்று அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில் ஒரு தனிப்பட்ட நபர் அந்நியபாஷை வரத்தை பெற்ற தாகவோ அல்லது பேசினதாகவோ குறிப்பிடப்படவில்லை மாறாக கூடியிருந்தவர்கள் யாவரும் பேசினதாகத்தான் நாம் கண்டுகொள்ள முடியும் (அப். 2-ல் 12 அப்போஸ்தலர்கள்; அப். 10-ல் கொர்நேலியு வீட்டில் கூடியிருந்தவர்கள்; அப். 19-ல் யோவான் ஸ்நானனின் 12 சீஷர்கள்). ஆனால் கொரிந்து சபையிலே எல்லோரும் அந்நியபாஷையில் பேசவில்லை அதாவது அந்நியபாஷை வரம் எல்லோருக்கும் அருளப்படவில்லை (1 கொரி. 12:10, 30).

இப்படியாக நமக்கு முன்பாக மேலே குறிப்பிடப்பட்டிருக்கிற இரண்டு வேறுபாடுகள் காணப்படுவதால், உடனே நாம் அன்று அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில் பேசப்பட்ட அந்நிய பாஷை வேறு, கொரிந்து சபையிலே பேசப்பட்ட அந்நியபாஷை வேறு என்று கூறிக்கொண்டு இன்று பேசப்படும் அந்நியபாஷை சரியானது தான் என்று நாம் எண்ணினால் அது முற்றிலும் தவறானதும் வேதத்திற்கு புறம்பானதுமாகும். ஏனென்றால் அப்போஸ்தலனாகிய பவுல் "**உலகத்திலே எத்தனையோவிதமான பாஷைகள் உண்டாயிருக்கிறது, அவைகளில் ஒன்றும் அர்த்தமில்லாததல்ல**" (1 கொரி. 14:10) என்று கூறும்போது கொரிந்து சபையில் பேசப்படுகிற பாஷைகள் அர்த்தமுள்ளதாக இருக்க வேண்டும் என்றும் அது உலகத்திலே பேசப்படுகிற பாஷைகளில் ஒன்றாகத்தான் இருக்க வேண்டும் என்றும் வலியுறுத்துவது இங்கே மிகத்தெளிவாக விளங்குகிறது. மேலும் லூக்கா அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்திலும், பவுல் கொரிந்தியர் நிருபத்திலும் அந்நியபாஷையைக் குறிப்பிடுவதற்காக பயன்படுத்தியது "**குளோசா**" [glossa] என்ற ஒரே வார்த்தையாகும். அதுமாத்திரமல்ல, பவுல் 1 கொரிந்தியர் 12:10 ல் "**பற்பல பாஷைகள்**" [kinds of tongues] என்று குறிப்பிடுகிறார்; அதாவது மெய்யாகவே ஜனத்தின் மத்தியில் பேசப்பட்ட பாஷைகளின் குடும்பத்தை [family groupings of real languages] அவர் குறிப்பிடுகிறார்.

**கவனிக்கவும்**: அப்போஸ்தலனாகிய பவுல் ஏசாயா 28:11-ஐ (cf. 1கொரி. 14:21) குறிப்பிட்டு மேற்கோள் காட்டி ஒப்பிட்டு கூறினபோது, அவர் குறிப்பிடுகிற சம்பவம் அசீரியர்கள் மூலமாக கி.மு. 722 ல் சம்பவித்த நிகழ்வாகும். அதாவது அசீரியர்கள் பாஷை யூதர்களுக்கு புரியாத அல்லது கற்றறிந்திராத பாஷையாகும். எனவே கொரிந்து சபையிலே குறிப்பிடுகிற அந்நியபாஷை அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில் குறிபிட்டிருக்கிற அன்னியவாஷையை விட வேறுபாடானது அல்ல; இரண்டு புத்தகங்களும் பாஷைகளையே [languages] குறிப்பிடுகிறது.

அப்போஸ்தலனாகிய பவுலுடைய நாட்களில் கர்த்தரின் செயலால் பவுல் தனது சுவிசேஷ பிரயாணத்தில் செய்த ஊழியத்தின் பலனாக ஸ்தாபிக்கப்பட்ட எல்லா சபைகளும் அந்நியபாஷையில் பேசினதாக சான்று இல்லை; கொரிந்து சபை அல்லாத வேறு சபைகளுக்கு நிருபங்களை எழுதியபோது இதை பவுல் குறிப்பிடவும் இல்லை. எது எப்படியாக இருந்தாலும், கொரிந்து சபையிலே அந்நியபாஷையில் பேசினதை யாரும் மறுக்கமுடியாது. எனவே, ஆவிக்குரிய வரங்களுக்குள் ஒன்றான அந்நியபாஷையில் பேசின கொரிந்து சபையின் குணநலன்கள் அல்லது பண்புகளைக் குறித்து [characteristics] நாம் அறிந்து கொள்ளவேண்டியது மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். கொரிந்து சபையில் காணப்பட்ட சில பண்புகளை கீழே குறிப்பிடுகிறேன், நீங்கள் மிகக் கவனமாக எல்லா வேத குறிப்புகளையும் வாசித்து அறிந்துக்கொள்ள வேண்டுமென வாஞ்சிக்கிறேன்.

## கொரிந்து சபையில் காணப்பட்ட சில காரியங்கள்

மெய்யாகவே இது நமக்கு பெரிய ஆச்சரியம்தான், அதாவது தங்களுக்கு எல்லா வரங்களும் (விசேஷமாக அந்நியபாஷை வரம்) உண்டென்று பெருமையாக பறைசாற்றிக்கொண்டிருந்த கொரிந்து சபையார் தங்கள் நடைமுறை வாழ்விலே ஆவிக்குரியவர்களாக நடந்துகொள்ளவில்லை. மாறாக மாம்சத்திற்குரியவர்களாகத் தான் நடந்து கொண்டார்கள். ஆவிக்குரிய வாழ்வில் இது ஒரு மிகப்பெரிய தோல்வியாகும். அவர்கள் தங்களுடைய ஆவிக்குரிய வாழ்க்கையில் மாசுபட்டு, சீர்குலைந்து ஒழுக்கநெறி தவறி தாங்களும் வளராமல் மற்றவர்களையும் வளர விடாமல் யாவருக்கும் களங்கத்தை ஏற்படுத்தி

னார்கள். விசுவாசிகளுடைய வாழ்க்கையில் காணக்கூடாத அநேகக் காரியங்கள் அவர்களில் காணப்பட்டது. இதோ அவைகள்:

- ❖ அவர்களுக்குள் பிரிவினைகள் உண்டாயிருந்தன (1:12,13; அதி.3)
- ❖ அவர்கள் மாம்சத்திற்குரியவர்களாயிருந்தார்கள் (அதி.3)
- ❖ அவர்களுக்குள்ளே விபச்சாரப் பாவம் உண்டாயிருந்தது (அதி.5)
- ❖ அவர்களுக்குள்ளே வழக்குகள் உண்டாயிருந்தன (அதி.6)
- ❖ அவர்களுக்குள்ளே விவாகத்தையும் அவிவாகத்தையும் குறித்த வாழ்வியல் சந்தேகங்கள் உண்டாயிருந்தன (அதி.7)
- ❖ அவர்கள் பலவீனமுள்ள சகோதரர்களை ஒரு பொருட்டாக கருதாமல் அவர்களுக்கு இடறலாக இருந்தார்கள் (அதி.8)
- ❖ அவர்கள் அப்போஸ்தலனாகிய பவுலினுடைய அப்போஸ்தல அதிகாரத்தை அங்கீகரிக்கவில்லை (அதி.9)
- ❖ அவர்கள் கர்த்தருடைய மேசையை ஆசரிப்பதிலே தகாதவிதமாய் நடந்துகொண்டார்கள் (அதி.11)
- ❖ அவர்கள் தங்களுக்கு உண்டாயிருந்த ஆவிக்குரிய வரங்களை தவறான முறையில் கடைப்பிடித்தார்கள் (அதி.12,13,14)
- ❖ அவர்கள் தங்கள் மரணத்திற்குப்பின் சம்பவிக்கப்போகிற உயிர்த்தெழுதலைக் குறித்து சந்தேகமுடையவர்களாக காணப் பட்டார்கள் (அதி.15)

பரிசுத்த ஆவியானவர் சபைக்கு அருளிய அடையாள வரங்களில் ஒன்றான அந்நியபாஷைகளில் பேசின அவர்களின் அதீத ஆசைக்கு அப்போஸ்தலனாகிய பவுல் தடையாக இருக்கவில்லை. எனவேதான், அவர்கள் அந்நியபாஷைகளிலே பேசுவதற்கு சில விதிமுறைகளைக் குறிப்பிடுகிறார். அதாவது 1 கொரிந்தியர் 14 ஆம் அதிகாரம் 26 முதல் 40 வரையுள்ள வசனங்களில் ஏறக்குறைய 8 நிபந்தனைகளை பவுல் முன் வைக்கிறார். மீண்டும் கூறுகிறேன் உங்கள் சிந்தனைகளை சிதற விடாமல் மனதை ஒருநிலைப்படுத்தி மிக கவனமாக குறிப்பிடப்பட்டிருக்கிற எல்லா வேத வசனங்களையும் ஒன்றுக்கும் மேற்பட்ட முறை வாசித்து தியானியுங்கள், தேவன் மெய்யாகவே உங்களுக்கு தமது வார்த்தையை சரியாக அறிந்துக் கொள்ள போதுமான வெளிச்சத்தை தருவார். இதோ 8 நிபந்தனைகள்:

- பக்திவிருத்திக்கு ஏதுவாக பேசப்பட வேண்டும் (26)
- இரண்டு அல்லது மூன்று பேர் மட்டும் பேச வேண்டும் (27)
- ஒவ்வொருவராய் அதாவது ஒருவருக்குப்பின் ஒருவராய் பேச வேண்டும் ஒரே நேரத்தில் அல்ல (27, 30)
- அர்த்தத்தை சொல்லுகிறவன் இருந்தால் மட்டுமே பேசவேண்டும் பேசும்போது அதன் அர்த்தமும் சொல்லப்பட வேண்டும் (27, 28)
- இரண்டு அல்லது மூன்று பேர் தவிர மீதமுள்ளவர்கள் கூறப்படுகிற செய்தியை/தேவனுடைய வார்த்தையை நிதானிக்க வேண்டும் (29)
- ஸ்திரீகள் பேசாமல் இருக்க வேண்டும், சபையிலே பேசுகிறது அவர்களுக்கு அயோக்கியமானதாகும் (34, 35)
- இப்படிப்பட்ட முறைகளைக் ஒருவர் கடைப்பிடிக்கும்போது அந்நியபாஷை பேசுவதற்கு தடைபண்ணக் கூடாது (39)
- அந்நியபாஷைகளில் பேசும்போதும் சபையின் மற்ற அனைத்து நடவடிக்கைகளிலும் ஒவ்வொருவரும் நல்லொழுக்கத்தையும் கிரமத்தையும் கடைப்பிடிக்க வேண்டும் (40)

இந்த முறையைக் கைக்கொண்டு செயல்படுத்தியிருந்தால் அது வீணான பிரச்சனைகளையும் குழப்பத்தையும் அன்று கொரிந்து சபையிலே ஏற்படுத்தி இருந்திருக்காது. அந்நியபாஷை வரம் இன்றும் இருக்கிறதா என்பது ஒருபுறம் இருந்தாலும் இன்று அந்நிய பாஷைகளிலே பேசுகிறவர்கள் மேற்கூறப்பட்டிருக்கிற நிபந்தனை களின்படி தான் பேசுகிறோமா என்று ஆராய்ந்து பார்ப்பது மிக நல்லது.

## தற்பரிசோதனைக்காக

நாங்கள் அந்நியபாஷைகளிலே பேசுகிறோம் என்று கூறிக் கொள்பவர்களும் தங்களை அந்நியபாஷைகளிலே பேசுகிறவர்களாக காண்பித்துக் கொள்ளுகிறவர்களும், கீழே கொடுக்கப்பட்டிருக்கிற கேள்விகளைத் தனக்குத்தானே கேட்டுக்கொண்டு ஒன்றுக்கும் மேற்பட்ட முறை வாசித்து தற்பரிசோதனை செய்தால் மெய்யாகவே மிக நலமாய் இருக்கும்.

- நான் பேசுகிறது ஏதோ ஒரு தேசத்தில் இன்றும் பேச்சு வழக்கில் இருக்கிற மனிதர்கள் பேசுகிற பாஷையா (குளோசா - glossa)?
- நான் பேசுகிற பாஷை எனக்குப் புரிகிறதா? (அதி.14)

- நான் பேசுவது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு மகிமையைக் கொண்டுவருகிறதா? (அப்.2:11)
- நான் பேசுவதைக் கேட்கிறவர்கள் தங்களுடைய பாவ வாழ்வை உணருகிறார்களா? கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு இரட்சிக்கப் படுகிறார்களா? (அப்.2:14,37)
- நான் பேசுகிறபொழுது கேட்கிறவர்கள் புரிந்து கொள்வதற்காக அந்நியபாஷை மொழியாக்கம் செய்யப்படுகிறதா? (1கொரி. 14:5,13,28)
- நான் பேசுகிற அந்நியபாஷை மெய்யாகவே அர்த்தமுள்ள பாஷைதானா என்று இரண்டு அல்லது மூன்று பேரால் நிதானிக்கப்படுகிறதா?

## சிந்திக்க வேண்டியவைகள் (1 கொரிந்தியர் 14)

- அந்நியபாஷை அவிசுவாசிகளுக்கு அடையாளம் (22)
- சபையின் பக்தி விருத்திக்கு ஏதுவாக பேசப்பட வேண்டும் (26)
- இரண்டு அல்லது மூன்று பேர் மட்டும் பேச வேண்டும் (27)
- ஒருவர் பின் ஒருவராக பேச வேண்டும் (27)
- அர்த்தம் சொல்லப்பட வேண்டும் (27)
- அர்த்தம் சொல்லுகிறவன் இல்லாவிட்டால் பேசக்கூடாது (28)
- ஸ்திரீகள் (பெண்கள்) பேசக்கூடாது (34,35)
- தீர்க்கத்தரிசன வரம் அந்நியபாஷையை விட மேலானது (1-4)
- நல்லொழுக்கமாயும் கிரமமாயும் பேச வேண்டும் (40)

# அந்நியபாஷை: அன்றும் இன்றும்

| கொரிந்து சபை | இன்று |
|---|---|
| அவிசுவாசிகளுக்கு அடையாளம் | விசுவாசிகளுக்கு அடையாளம் |
| சபையின் பக்தி விருத்திக்கு ஏதுவாக பேசப்பட்டது | சபையில் கூச்சலும் குழப்பமும் ஏற்படுகிறது |
| இரண்டு அல்லது மூன்று பேர் மட்டும் பேசினார்கள் | சபை மக்கள் முழுவதும் |
| ஒருவர் பின் ஒருவராக பேசினார்கள் | ஒரே நேரத்தில் எல்லோரும் பேசுகிறார்கள் |
| அர்த்தம் சொல்லப்பட வேண்டும் | அர்த்தம் சொல்லப்பட வில்லை |
| அர்த்தம் சொல்லுகிறவன் இல்லாவிட்டால் பேசக்கூடாது | அர்த்தத்தைச் சொல்லுகிறவன் இல்லை. இருப்பினும் பேசுகிறார்கள் |
| ஸ்திரீகள் பேசாமல் அமைதியாக இருக்கவேண்டும் | ஸ்திரீகள் தான் இன்று அதிகம் பேசுகிறார்கள் |
| தீர்க்கத்தரிசன வரம் அந்நிய பாஷை வரத்தை விட மேலானது | அந்நியபாஷை வரம் தான் ஆவியின் வரங்களில் மேலானது எனக் கருதுகிறார்கள் |
| நல்லொழுக்கமாயும் கிரமமாயும் பேச வேண்டும் | அப்படி நல்லொழுக்கமாகவும் கிரமமாகவும் பேசுவதில்லை |

பாகம் IV

## அரிதானாலும் அறிந்துகொள்ள வேண்டியவைகள்

நாம் இப்பொழுது அந்நியபாஷையைக் குறித்ததான நான்காவது பாகத்திற்கு வந்திருக்கிறோம். நான் முன்னமே முதலாம் பாகத்தின் இறுதியில் குறிப்பிட்டதுபோல சில இன்றியமையாத கேள்விகளுக்கு வேதத்தின் அடிப்படையிலுள்ள சரியான திருமறை விளக்கங்களை இப்பகுதியில் ஆராயப்போகிறோம். இவைகளை நீங்கள் வாசிக்கும் போது, அந்நியபாஷையைக் குறித்ததான இன்னும் அநேக கேள்வி களுக்குரிய வேதப்பூர்வமான விளக்கங்களை அறிந்து கொள்ளலாம்.

அந்நியபாஷையைக் குறித்த பிரசங்கங்களையும் திருமறை விளக்கங்களையும் நாம் கேட்கும்போதும் கேள்விப்படுகிறபோதும் அநேக சந்தேகங்களும் கேள்விகளும் நம் சிந்தனையில் பிறக்கலாம், அது மிக முக்கியமானதாகவும் அறிந்துக்கொள்ள வேண்டியதும் தவிர்க்க இயலாததுமான காரியங்களாக இருக்கலாம். அதனால் ஒரு சில முக்கியமான கேள்விகளுக்குரிய திருமறை விளக்கங்களை மட்டும் எளிய நடையில் தொகுத்து வழங்கி இருக்கிறேன். நீங்கள் ஏற்கனவே அந்நியபாஷையைக் குறித்து கேள்விப்பட்டிருந்தாலும் அறிந்திருந்தாலும் தயவுகூர்ந்து அவைகளை சிறிது நேரம் ஒதுக்கி வைத்துவிட்டு திறந்த மனதோடு கொடுக்கப்பட்டிருக்கிற அனைத்து வேதவசனக் குறிப்புகளையும் ஒன்றுக்கும் மேற்பட்ட முறை வாசித்து தியானியுங்கள், தேவன் உங்களோடு இருந்து மெய்யான சத்தியத்தை அறிந்துக்கொள்ள வெளிச்சம் கொடுப்பார்.

### பெந்தெகொஸ்தே நாளில் எத்தனை பேர் அந்நியபாஷைகளில் பேசினார்கள்? 12 பேரா அல்லது 120 பேரா?

அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில் ஏறக்குறைய மூன்று அதிகாரங்களில் மூன்று தரத்திலுள்ள வெவ்வேறு மக்கள் பிரிவினர் அந்நியபாஷைகளில் பேசினதாக மருத்துவர் லூக்கா குறிப்பிடுகிறார். இவைகளைக்குறித்து நான் ஏற்கனவே இரண்டாம் பாகத்தில் விளக்கமாக கூறியிருக்கிறேன். இருப்பினும் அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தின் இரண்டாம் அதிகாரத்தை இங்கே நாம் மீண்டும் தியானிக்கப்போகிறோம். அதாவது பெந்தெகொஸ்தே நாளில்

எத்தனை பேர் அந்நியபாஷைகளில் பேசினார்கள்? பன்னிரண்டு அப்போஸ்தலர்கள் மட்டும் பேசினார்களா? இல்லை 120 சீஷர்கள் பேசினார்களா? மெய்யாகவே இதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். இதிலே அநேக சத்தியங்கள் அடங்கி இருக்கிறது. நான் மேலே குறிப்பிட்டதுபோல இரண்டு தரத்தில் இச்சம்பவம் கிறிஸ்தவர்கள் மத்தியில் விசுவாசிக்கப்படுகிறது. ஒன்று, 12 அப்போஸ்தலர்கள் மட்டும் தான் பேசினார்கள்; இரண்டு, 12 பேர் மட்டுமல்ல 120 பேர் பேசினார்கள்.

**கவனிக்கவும்**: 120 பேர் பேசினார்கள் என்று கூறுவோமானால் பெண்களும் அந்நியபாஷைகளில் பேசினார்கள் என்று நாம் ஒப்புக்கொண்டே ஆக வேண்டும், காரணம் 120 பேர் கூடுகையில் பெண்களும் இருந்தார்கள் (அப். 1:13-15). மேலும் நாம் கவனிக்க வேண்டிய காரியம் அப்.1:5-ல் எருசலேமை விட்டுப் போகாமல் இயேசுவினிடத்தில் கேள்விப்பட்ட பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருக்க வேண்டும் என்கிற கட்டளைப் பெற்றிருந்தாலும், 13 முதலுள்ள வசனங்களில் அவர்கள் கூடிவந்தது காத்திருப்புக்காக அல்ல மாறாக வசனம் 15 முதல் வாசிக்கும் போது அவர்கள் கூடி வந்தது 12-வது அப்போஸ்தலனை தெரிந்தெடுப் பதற்காக என்று தெளிவாக அறிந்துகொள்ளலாம். அந்தப்படியே 15-வது வசனத்தில் 120 பேர் கூடியிருந்த கூட்டத்தில் எழுந்து நின்று பேசுவதையும் பின்பு 26-ஆம் வசனத்தில் மத்தியாவின் பேரில் சீட்டு விழுந்ததால் பதினோரு அப்போஸ்தலருடனே அவனும் சேர்த்துக் கொள்ளப்பட்டதையும் அறிந்துக்கொள்ள முடியும்.

ஆகையால் வேதத்தை திறந்தமனதோடு வாசித்து ஒவ்வொரு வேத வாக்கியங்களையும் கருத்தோடு வாசித்து தியானிப்போமானால் அப்போஸ்தலருடைய நடபடிகள் இரண்டாம் அதிகாரத்தில் பேசியவர்கள் 120 பேர் அல்ல மாறாக 12 அப்போஸ்தலர்கள் மட்டும் தான் என்பதை எவ்வித சந்தேகமுமின்றி தெளிவாக தெரிந்துக் கொள்ளலாம். இதற்குரிய சான்றுகளும் திருமறை விளக்கங்களும் கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது.

- ❖ பிதாவின் வாக்குத்தத்தம் 12 அப்போஸ்தலர்களுக்கு கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே அருளப்பட்டது (அப்.1:4).

❖ அப்.2:1ல் உடனடியாக அடுத்து வருகிற "**அவர்கள்**" என்னும் மறுபெயரினைவினை [nearest antecedent] அப்.1:26ல் குறிப்பிடப்பட்டிருக்கிற அப்போஸ்தலர்களையே குறிக்கிறது.

❖ அந்நியபாஷைகளில் பேசப்படுவதைக்கேட்ட கூடியிருந்தவர்கள் யாவரும் பிரமித்து ஆச்சரியப்பட்டு , ஒருவரையொருவர் பார்த்து: இதோ, பேசுகிற இவர்களெல்லாரும் **கலிலேயரல்லவா**? என்று கூறினார்கள் (அப்.2:7). இந்த கலிலேயர் என்கிற அழைப்பு அடைச்சொல் அப்போஸ்தலர்களைக் குறிப்பதற்காக மட்டும் பிரத்யேகமாக (விசேஷமாக) பயன்படுத்தப்பட்டதை நாம் கண்டு கொள்ளலாம் (லூக்கா 22:59; அப்.1:11).

❖ அப்.1:26 **மற்றும்** 2:1 **வசனங்களில்** பயன்படுத்தப்பட்டிருக்கிற பெயர்ச்சொல், மறுபெயர்ச்சொல் மற்றும் பெயரடைச்சொல் [Noun, Pronoun, Adjective] யாவும் ஆண்பாலில் மட்டுமே [Masculine Gender] பயன்படுத்தப்பட்டிருக்கிறது (அப்.2:1-ல் "**அவர்களெல்லாரும்**" என்கிற வார்த்தை "**பாண்டேஸ்**" [pantes] என்கிற கிரேக்க பதத்தில் இருந்து வருகிறது, இதுவும் ஆண்பாலில்தான் குறிப்பிடப்பட்டிருக்கிறது [Adjective, Masculine, Plural, Nominative]. அதேபோல, அப்.1:26-ல் "**சீட்டுப்போட்டார்கள்**" என்கிற வார்த்தை "**க்லேரோஸ்**" [kleros] என்கிற கிரேக்க பதத்தில் இருந்து வருகிறது, இதுவும் ஆண்பாலில்தான் குறிப்பிடப்பட்டிருக்கிறது [Noun, Masculine, Plural, Accusative].

❖ பெந்தெகொஸ்தே நாளில் அப்போஸ்தலர்கள் ஆவியினால் நிறைந்து அவரவர்களுக்கு தந்தருளப்பட்ட படியே வெவ்வேறு பாஷைகளில் பேசினதைக் கேட்ட கூடியிருந்த ஜனங்கள்: *"இவர்கள் மதுபானத்தினால் நிறைந்திருக்கிறார்கள் என்று பரியாசம்பண்ணினார்கள்",* இதைக்கண்ட அப்போஸ்தலனாகிய பேதுரு **பதினோருவரோடுங்கூட** எழுந்து நின்று பிரசங்கம் தொடங்குவதை அறிந்துக்கொள்ளலாம் (அப்.2:14). இங்குள்ள வித்தியாசத்தை கவனியுங்கள் அப்.1:15-ல் **நூற்றிருபதுபேர் கூடியிருந்த போது**, அவர்கள் நடுவில் பேதுரு எழுந்து நின்று.

ஆனால் இங்கே அப்.2:14-ல் **பதினோருவரோடுங்கூட** பேதுரு எழுந்து நின்று.)

- பேதுருவின் பிரசங்கத்தைக் கேட்டவர்கள் முடிவில் தங்களுடைய "இருதயத்தில் குத்தப்பட்டவர்களாகி, **பேதுருவையும் மற்ற அப்போஸ்தலரையும்** பார்த்து: **சகோதரரே**, நாங்கள் என்ன செய்யவேண்டும்" என்று கேட்பதைக் கவனியுங்கள் (அப்.2:37). நூற்றிருபது பேரைப்பார்த்து அல்ல; சகோதர சகோதரிகளே என்றும் அல்ல. [கவனியுங்கள் இங்கேயும் ஆண்பால் (masculine gender) தான் பயன்படுத்தப்பட்டிருக்கிறது: கிரேக்க பதங்கள் "**அன்றேஸ்**" மற்றும் "**அடேல்ஃபோய்**" (men and brothers)].

- கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மத்தேயு 16:18-ல் "**என் சபையைக் கட்டுவேன்**" என்று கூறியிருந்தாலும், இயேசு கிறிஸ்து உயிரோடு இருந்த நாள் வரையிலும் மட்டுமல்ல உயிர்த்தெழுந்து பரமேறிச்செல்லும் நாள் வரையிலும் சபை ஸ்தாபிக்காப்பட்டதாக நமக்கு எந்த ஆதாரமும் இல்லை. பொதுவாக எல்லா தரப்பினராலும் அங்கீகரிக்கப்படுகிற (ஒப்புக்கொள்ளப்படுகிற) காரியம் பெந்தெகொஸ்தே நாளில் ஆவியானவரின் வருகையின் போது நிகழ்ந்த அற்புதம், அடையாளம் மற்றும் ஜனங்களின் மனமாற்றம் மூலம் சபை ஸ்தாபிக்கப்பட்டது. இங்கே கவனிக்க வேண்டிய விஷயம் **அஸ்திபாரம் அப்போஸ்தலர்களே** தவிர பிற சீஷர்களோ அல்லது விசுவாசிகளோ அல்ல (எபேசியர் 2:20). நாமெல்லாரும் அப்போஸ்தருடைய அஸ்திபாரத்தின் மேல் ஜீவனுள்ள கற்களாக கட்டப்பட்டு சபையானது கட்டப்படுகிறது (1பேதுரு 2:5). எனவே அன்று சபை ஸ்தாபிக்கப்பட்ட பெந்தெ கொஸ்தே நாளில் கூடி வந்ததும் அந்நிய பாஷைகளிலே பேசினதும் கிறிஸ்துவின் ஜீவனுள்ள சபைக்கு அஸ்திபாரமானதும் அப்போஸ்தலர்களே அல்லாமல் 120 பேர் இல்லை.

## தூதர் பாஷைகள் என்றால் என்ன?

அப்போஸ்தலனாகிய பவுல் 1கொரிந்தியர் 13:1-ல் இவ்வாறு கூறுகிறார்: "நான் மனுஷர் பாஷைகளையும் **தூதர் பாஷைகளையும்** பேசினாலும், அன்பு எனக்கிராவிட்டால், சத்தமிடுகிற வெண்கலம் போலவும், ஓசையிடுகிற கைத்தாளம் போலவும் இருப்பேன்." இங்கே

அர்த்தத்தோடு பேசுகிறவர்களுக்கும் கேட்பவர்களுக்கும் புரியக்கூடிய நிலையில் பேசப்படுகிற அந்நியபாஷைகளை பவுல் குறைக்கூறவோ கண்டிக்கவோ இல்லை. மாறாக தனக்கு மாத்திரமே தெரிந்த, கேட்பவர்களுக்கு தெரிந்திராத அல்லது புரிந்துக்கொள்ள முடியாத பற்பல பாஷைகளைப் பேசுவது எவ்வளவு பெரிய குற்றம் என்பதையும் அர்த்தமில்லாத ஓசைகள் மற்றும் சத்தம் மூலம் என்ன பிரயோஜனம்; அன்பே பிரதானம் என்பதையும் எடுத்துரைத்து கண்டிக்கிறார்.

அதாவது மெய்யாகவே அப்படி ஒரு தூதர் பாஷைகள் இருப்பதாகவோ அந்த பாஷைகள் தனக்கு தெரியும் என்றோ பவுல் இங்கே கூறவில்லை; மாறாக கருத்துப்புனைவியல் பாங்கில் வினையுருக்களைப் [stating hypothetical statements by using subjunctive mood] பயன்படுத்தி புனைவுகோள் மூலம் அன்பே பிரதானம் என மேற்கோள் காட்டுகிறார் [A standard Greek grammar explains, "while the indicative assumes reality, the subjunctive assumes unreality"].

1கொரிந்தியர் 13-வது அதிகாரம் முழுவதும் நாம் வாசிப்போமானால், அந்நியபாஷை வரமோ அல்லது தீர்க்கத்தரிசன வரமோ முதன்மையான கருத்து அல்ல என்பதை தெளிவாக தெரிந்துக்கொள்ளலாம். அந்நியபாஷை வரம் மற்றும் தீர்க்கத்தரிசன வரத்தைப் பவுல் மேற்கோள் காட்டி, **அன்பை** பிரதானமாக எடுத்துரைப்பதைக் காணமுடியும். அதனால் தான் இறுதி வசனத்தில் தனது முடிவாக பவுல் கூறுகிறார்: "இப்பொழுது விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது; இவைகளில் **அன்பே** பெரியது."

**கவனிக்கவும்**: 1 கொரிந்தியர் 12 முதல் 14 வரையுள்ள அதிகாரங்களில் கிருபையின் ஆவிக்குரிய வரங்களைக் குறித்தும் அதன் பயன்பாட்டைக் குறித்தும் பவுல் விளக்குகிறார். சகல ஆவிக்குரிய வரங்களும் அன்போடு தான் பயன்படுத்தப்பட வேண்டும் அன்பு இல்லையென்றால் ஒன்றுமே இல்லை என்கிற நிலையை விவரிக்கிறார் [the emphasis in chapter 13 as well as in all 12 through 14 chapters, the unavoidable in using of spiritual gifts is love].

"**தூதர் பாஷைகள்**" என்று பவுல் இங்கே குறிப்பிட காரணம் என்ன? மெய்யாகவே தூதர் பாஷைகள் உண்டா? மெய்யாகவே பவுல் தூதர் பாஷைகளைப் பேசினாரா? நான் ஏற்கனவே கூறியதுப்போல இந்த அதிகாரம் முழுவதும் விசேஷமாக முதல் மூன்று வசனங்களில்

அன்பை மட்டும் தான் பவுல் பிரதானப்படுத்தி அல்லது மிகைப்படுத்திக் கூறுகிறார். அதை தெளிவு படுத்துவதற்காக பவுல் எடுத்துக்காட்டாக கூறுபவைதான் இந்த தூதர் பாஷைகள். அதாவது உயர்வுநவிற்சியாக ஏகதேச உருவக அணியைப் பயன்படுத்துகிறார் பவுல் [This usage is called “Hyperbole” [Rhetorical exaggeration]. It is permitted exaggeration in Greek. The author’s aim was to emphasize a truth in an illustrated way.] பவுல் நான் தூதர் பாஷைகளைப் **பேசினேன்** என்று கூறவில்லை மாறாக **பேசினாலும்** என்று கூறுகிறார். பேசினேன் என்பதற்கும் பேசினாலும் என்பதற்கும் நிறைய வித்தியாசம் இருக்கிறது [If I speak-NIV; Though I speak-NKJV]. உதாரணமாக, உங்கள் நண்பர் ஒருவரை கடைத்தெருவில் பார்க்கிறீர்கள். சிறிது நேரத்திற்கு பிறகு அவரது வீட்டுக்கு போகிறீர்கள், அவர் அங்கே இருக்கிறார். இப்பொழுது அவரைப் பார்த்து ஆச்சரியத்தோடு கேட்கிறீர்கள்: “நண்பா எப்படி இவ்வளவு சீக்கிரமாக வீட்டிற்கு வந்தாய்? பறந்து வந்தாயா?” என்று. இதன் அர்த்தம் உங்கள் நண்பருக்கு இறக்கைகள் இருப்பதாகவோ அதன் மூலமாக அவர் பறந்து வந்ததாகவோ அர்த்தமல்ல; மாறாக அவரது துரிதத்தை அல்லது விரைவாக வீடு வந்ததைக் குறிக்கிறது. அதே போல அப்போஸ்தலனாகிய பவுல் அன்பு மிக முக்கியம்; அன்பில்லை என்றால் எல்லாம் வீண் என்பதை சுட்டிக்காட்டுவதற்காக தூதர் பாஷைகளைக் கொண்டுவருகிறார்.

**கவனிக்கவும்**: இரண்டு காரியங்களை மனதில் இருத்த மறவாதீர்கள்: (1) கொரிந்து சபையிலே ஏற்பட்ட பிரச்சனைகளில் ஆவிக்குரிய வரங்களை பயன்படுத்துவதும் ஒன்றாகும், விசேஷமாக அந்நியபாஷை வரம். அதனால் தான் பவுல் இந்த நிருபத்திலே அதை சீர்ப்பொருந்தும் வண்ணமாக எடுத்துரைக்கிறார். (2) எத்தனை வரங்களையுடையவர்களாக இருந்தாலும் அன்பில்லை என்றால் அதில் ஒரு பிரயோஜனமும் இல்லை என்று பவுல் எடுத்துரைக்கிறார்.

அடுத்தபடியாக, தூதர் பாஷைகளில் பேசுகிறோம் என்பவர்களும், அப்போஸ்தலனாகிய பவுல் தூதர் பாஷைகளில் பேசினார் என்பவர்களும் சான்றாக கொண்டு வருவது 2 கொரிந்தியர் 12:2,3,4 வசனங்கள். இங்கே மூன்றாம் வானம் வரை எடுத்துக்கொள்ளப்பட்ட ஒரு மனுஷனையும் அது பரதீசு எனவும் அங்கே மனுஷர் பேசப் படாததும் வாக்குக்கெட்டாததுமாகிய வார்த்தைகளைக் கேட்டான் என்றும் பவுல் கூறுகிறார். [“**அர்ரேட்டா**” மற்றும் “**ரேமாட்டா**” என்கிற இரண்டு கிரேக்க பதங்களில் இருந்துதான் பேசப்படாததும் வாக்குக் கெட்டாததுமாகிய என்கிற மொழிப்பெயர்ப்பு வருகிறது. It is being

translated as "inexpressible words," unutterable words" and unspeakable words.] பவுல் இரண்டு முறை "**அதை அறியேன்; தேவன் அறிவார்**" என்று கூறுகிறார். கவனியுங்கள் 1கொரிந்தியர் 14:28-ல் அர்த்தஞ்சொல்லுகிறவன் இல்லாவிட்டால், சபையிலே பேசாமல், **தனக்கும் தேவனுக்கும்** தெரியப் பேசக்கடவன். அதாவது தேவனுக்கு மாத்திரம் தெரிந்தால் போதாது மாறாக பேசுகிறவர்களுக்கும் தெரிந்திருக்க வேண்டும். எனவே அந்நிய பாஷைகளில் பேசுகிறோம் என்று கூறிக்கொள்பவர்கள் தூதர் பாஷைகளில் பேசுகிறோம் என்றாலும் பவுலும் பேசினாரென்று 1கொரிந்தியர் 13:1 மற்றும் 2கொரிந்தியர் 12:2,3,4 வசனங்களை எடுத்துக்கூறினாலும் அது மிக மிக தவறானதாகும். காரணம் பவுல் தூதர்களுடைய பாஷையை குறித்து இங்கே கூறவில்லை. மேலும் மூன்றாம் வானத்தில் எடுத்துக்கொள்ளப்பட்ட மனுஷனுக்கு கேட்டது ஒன்றும் விளங்கவில்லை, தேவன் அறிவார் என்று கூறுகிறார்.

**சிந்தியுங்கள்**: ஆதியாகமத்திலிருந்து வெளிப்படுத்தின விசேஷம் வரையுள்ள 66 புத்தகங்களிலும் எங்கெல்லாம் தூதர்கள் தோன்றி பேசினார்களோ அவ்விடங்களில் எல்லாம் மனிதர்கள் பேசின பாஷைகளை பேசினார்களேயல்லாமல் வேறொரு பாஷைகளை அவர்கள் பேசவில்லை. அப்படி அவர்கள் அவர்களுடைய பாஷைகளில் பேசியிருந்தால் கேட்டவர்களாகிய ஆபிரகாம், ஆகார், யாக்கோபு மற்றும் யாவரும் எப்படி புரிந்துகொள்ள முடியும். [The charismatic and Pentecostal groups in order to justify their "ecstatic" ununderstandable utterings; they say that they speak in angelic languages. Nowhere in the scripture is it written that angels spoke in such a language which is extremely difficult to understand. Even our Lord never used any such language, which is incomprehensible].

## நீங்களெல்லாரும் அந்நியபாஷைகளைப் பேசும்படி விரும்புகிறேன் என்று ஏன் பவுல் கூறினார்?

எல்லோருக்கும் அந்நியபாஷை வரம் அருளப்படவில்லை என்று ஏற்கனவே 1கொரி.12:30,31-ல் கூறியிருக்கிற அப்போஸ்தலனாகிய பவுல், இங்கே 1கொரிந்தியர் 14:5-ல் நீங்கள் எல்லோரும் அந்நிய பாஷைகளைப் பேசும்படி விரும்புகிறேன் என்று கூறியிருப்பது நமக்கு கொஞ்சம் ஆச்சரியமாகத்தான் தோன்றும். ஏன் பவுல் அப்படி கூறினார் என்று நமக்கு சிறிது குழப்பம் அடையத்தோன்றும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. இருப்பினும் இதை புரிந்து கொள்வது

அவ்வளவு கடினம் இல்லை. இது பவுலின் ஒரு சொந்த விருப்பம் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. அதாவது **நீங்கள் எல்லோரும் அந்நியபாஷைகளைப் பேசுகிறீர்கள் என்றல்ல** மாறாக **நீங்கள் எல்லோரும் அந்நியபாஷைகளைப் பேசும்படி விரும்புகிறேன்** என்றுதான் பவுல் கூறுகிறார். இங்கே புரிந்து கொள்வதற்கு அவ்வளவு சிரமம் ஒன்றுமில்லை. உதாரணமாக ஒரு நிறுவனத்தில் அதன் மேலாளர் அனைத்து தொழிலாளர்களையும் பார்த்து: "நீங்கள் எல்லோரும் இந்த வருடம் ஒவ்வொருவரும் 10000000 ரூபாய் (ஒரு கோடி) வருமானம் ஈட்ட வேண்டும் என்று விரும்புகிறேன்" என்று கூறுகிறார். மேலாளருக்கும் தொழிலாளர்களுக்கும் மிக நன்றாகத் தெரியும் அது இயலாத காரியம் என்று; காரணம் மாதம் ஒன்றுக்கு 8 லட்சத்திற்குமேல் சம்பாதித்தால் தான் ஒரு வருடத்தின் முடிவில் ஆண்டு வருமானமாக ஒரு கோடி ரூபாய் ஈட்டமுடியும். இருப்பினும் தனது விருப்பமாக மேலாளர் அப்படி தெரிவிக்கிறார். அதேபோல 1கொரிந்தியர் 12:30-ஆம் வசனத்தில் எல்லோரும் அந்நியபாஷையில் பேசவில்லை என்றும் எல்லோருக்கும் அந்நியபாஷை வரம் அருளப்படவில்லை என்றும் கூறிய பவுலுக்கு மிக நன்றாக தெரியும் எல்லோரும் அந்நியபாஷைகளில் பேசமுடியாது என்று, இருப்பினும் தனது விருப்பமாக இதை தெரிவிக்கிறார். அதனால் தான் இது பவுலின் ஒரு சொந்த விருப்பம் என்று ஏற்கனவே கூறியிருக்கிறேன். அதாவது நீங்கள் எல்லோரும் அந்நியபாஷைகளைப் **பேசியிருந்தீர்கள்** அல்லது **பேசுகிறீர்கள்** என்றல்ல; மாறாக நீங்கள் எல்லோரும் அந்நியபாஷைகளைப் பேசும்படி **விரும்புகிறேன்** என்றுதான் பவுல் கூறுகிறார்.

அப்போஸ்தலனாகிய பவுல் ஏற்கனவே இதே நிருபத்தில் எல்லோரும் என்னைப்போலவே இருக்க விரும்புகிறேன் என்று கூறியிருக்கிறார் (1கொரி.7:7,8). இதன் அர்த்தம் கொரிந்து சபையில் எல்லோரும் விவாகம் பண்ணாதவர்கள் என்பதல்ல; மாறாக விவாகம் பண்ணாதவர்களும் கைம்பெண்களும் (விதவைகளும்) விவாகத்தில் பிணையப்பட்டு தேவனுக்காக தேவனுடைய காரியங்களில் அதிக கவனமில்லாமையில் போய்விடாதபடிக்கு பவுல் அப்படி கூறினார். அங்கே தானே 1கொரி.7:7-ல் பவுல், "**ஆகிலும் அவனவனுக்குத் தேவனால் அருளப்பட்ட அவனவனுக்குரிய வரமுண்டு**" என்று கூறுகிறார். அதாவது பவுல் நீங்கள் எல்லோரும் அந்நிய பாஷைகளைப் பேசும்படி விரும்புகிறேன் என்று கூறினாலும், எல்லோருக்கும் ஒரு அல்லது ஒரே குறிப்பிட்ட வரம் அளிக்கப்படுவதில்லை. ஆவியானவர் தமது விருப்பத்தின்படி சிலருக்கு சில வரங்கள் என்று பகிர்ந்தளிக்கிறார் (1கொரி.12:8,9,10,11). கவனமாய் வாசித்துப்பாருங்கள்,

எல்லோருக்கும் ஒரு வரம் என்று அல்ல மாறாக ஒருவனுக்கு அல்லது வேறொருவனுக்கு என்று தான் வாசிக்கிறோம்.

## அந்நியபாஷையிலே விண்ணப்பம் பண்ணுதல் என்றால் என்ன?

வெளிப்படையாகவும் கூட்டங்களிலும் அந்நியப்பாஷைகளிலே பேசாதவர்கள், "நான் தனிமையிலே உற்சாகத்தோடு தேவனிடத்தில் அந்நியபாஷையில் விண்ணப்பம் பண்ணுகிறேன்" என்று கூறிக் கொள்பவர்கள் உண்டு. அப்படி அவர்கள் பேசுவது அவர்களுக்கே புரியவில்லை என்கிறபோதிலும், தேவனைத் துதிப்பதற்கும் பாடுவதற்கும் ஆவியிலே நிறைவதற்கும் எங்களை உற்சாகப் படுத்துகிறது என்கிறார்கள். ஆனால் வேதம் உரைப்பது இப்படிப்பட்ட விண்ணப்பமோ பாடல்களோ அல்ல. 1கொரிந்தியர் 14:14,15-ல் பவுல் மிகத் தெளிவாக எடுத்துரைக்கிறார்: "நான் அந்நியபாஷையிலே விண்ணப்பம் பண்ணினால், என் ஆவி விண்ணப்பம் பண்ணுமேயன்றி, என் கருத்து பயனற்றதாயிருக்கும். இப்படியிருக்க, செய்ய வேண்டுவதென்ன? நான் ஆவியோடும் விண்ணப்பம் பண்ணுவேன், கருத்தோடும் விண்ணப்பம் பண்ணுவேன்; நான் ஆவியோடும் பாடுவேன், கருத்தோடும் பாடுவேன்."

இதிலிருந்து நாம் அறிந்துக்கொள்ள வேண்டிய சத்தியம் என்னவென்றால் தனிமையிலே பேசினாலும் தேவனோடு பேசினாலும் கூட்டங்களிலே பேசினாலும் விண்ணப்பங்களிலே பேசினாலும் **கருத்தோடு மட்டுமே** பேச வேண்டும். ஒழுங்கும் கிரமமும் அர்த்தமும் கருத்தும் இல்லாத ஒரு பாஷையை வேதம் மெய்யாகவே மெய்யாகவே கூறவில்லை. தனிப்பட்ட முறையிலே பேசு, தேவனோடு பேசு மற்றும் ஆவியிலே பேசு என்றெல்லாம் கூறப்படுவதற்கான காரணம் பேசுகிற பாஷை விளங்காத பாஷை என்பதால் அல்ல; மாறாக அந்த பாஷையின் அர்த்தத்தை சொல்ல யாரும் இல்லாததே (1கொரி.14:2,28). கவனமாக கவனியுங்கள்: 1கொரி.14:2ல் "**அவன் பேசுகிறதை ஒருவனும் அறியாதிருக்கிறபடியினாலே,** அவன் மனுஷரிடத்தில் பேசாமல், தேவனிடத்தில் பேசுகிறான்." மேலும் 1கொரி.14:28ல் "**அர்த்தஞ் சொல்லுகிறவனில்லாவிட்டால்,** சபையிலே பேசாமல், தனக்கும் தேவனுக்கும் தெரியப் பேசக்கடவன்."

அந்நியபாஷையிலே தேவனோடு பேசுகிறான் என்றும் தனக்கும் தேவனுக்கும் தெரிய பேசுகிறான் என்றும், விண்ணப்பம் பண்ணுகிறான் என்றும் பேச தடைப்பண்ணாதிருங்கள் என்றும் பவுல் கூறுவதற்கான பிரதான காரணம், அன்று பவுலின் நாட்களில் அந்நியபாஷை வரம்

எல்லோருக்கும் இல்லையென்ற போதிலும் சிலருக்கு அருளப்பட்டது. அதுமட்டுமல்ல, அது நடைமுறையில் பேசப்பட்டது; உதாரணமாக கொரிந்து சபை. அது கருத்தோடும் அர்த்தமுள்ளதாகவும் ஒழுங்கும் கிரமுமாகவும் இருக்கவேண்டுமென்பது தான் பவுலின் விருப்பமும் ஆவியானவரின் சித்தமுமாயிருக்கிறது. திரும்ப திரும்ப சில அர்த்த மற்ற வார்த்தைகளைக்கூறி புரிந்துகொள்ள இயலாத ஒலிகளை எழுப்பி விண்ணப்பம் பண்ணுவதன் மூலம் ஒருவரின் விண்ணப்பம் கேட்கப்படும் என்று கருதுவது தவறாகும். அவ்வாறாக ஏறெடுக்க ப்படும் விண்ணப்பங்களை தேவன் கேட்பதில்லை (மத்தேயு 6:7).

எனவே அந்நியபாஷைகளில் விண்ணப்பம் பண்ணுகிறேன் என்பவர்கள் தங்களைத் தாங்களே வஞ்சித்துக் கொள்ளாமல் தேவனுக்கேற்ற விதமாக ஆவியானவருடைய உதவியின் மூலம் விண்ணப்பம் பண்ணி அவர் அருளும் ஆசிர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள முயலுங்கள். தேவன் உங்களை ஆசிர்வதிப்பார்.

## அந்நியபாஷைகளிலே பெண்கள் பேசினார்களா?

புதிய ஏற்பாட்டில் பொதுவாகவே பெண்களுக்கு சபையின் நடவடிக்கைகளிலும், கூட்டங்களிலும் மற்றும் அனைத்துக் கூடி வருதலிலும் பேச அனுமதி அளிப்பதில்லை. இருப்பினும் மற்ற நிலைகளில், உதாரணமாக சுவிசேஷ ஊழியங்களிலும் உபசரிப்பதிலும் உடன் வேலையாட்களாக சில பெண்கள் இருந்ததை நாம் வேதத்திலே காணமுடியும். இங்கே அந்நியபாஷையில் பெண்கள் பேசினார்களா? பேசலாமா? என்று கேட்போமானால், நான் ஏற்கனவே அப்.2 ல் எத்தனை பேர் அந்நியபாஷையில் பேசினார்கள்? 12 பேரா அல்லது 120 பேரா? என்ற கேள்வியின் பதிலிலே கூறியிருக்கிறேன். அதாவது ஆண்கள் மட்டுமே பெந்தெகொஸ்தே நாளில் பேசினார்கள் அதுவும் குறிப்பாக அப்போஸ்தலர்கள் மட்டுமே பேசினார்கள்.

1கொரி.14:34,35 வசனங்களில் பவுல் விளக்குகிறார்: "சபைகளில் உங்கள் **ஸ்திரீகள் பேசாமலிருக்கக்கடவர்கள்**; **பேசும்படிக்கு அவர்களுக்கு உத்தரவில்லை**; அவர்கள் அமர்ந்திருக்க வேண்டும்; வேதமும் அப்படியே சொல்லுகிறது. அவர்கள் ஒரு காரியத்தைக் கற்றுக்கொள்ள விரும்பினால், வீட்டிலே தங்கள் புருஷரிடத்தில் விசாரிக்கக்கடவர்கள்; **ஸ்திரீகள் சபையிலே பேசுகிறது அயோக்கியமாயிருக்குமே**."

பொதுவாகவே பெண்கள் சபைக் கூட்டங்களில் பேசக்கூடாது என்பது மட்டுமல்ல; இங்கே அதிகாரம் 14-ல் அந்நியபாஷையைக் குறித்து கூறும்போது **“சபைகளில் உங்கள் ஸ்திரீகள் பேசாமலிருக்கக்கடவர்கள்”** என்று அப்போஸ்தலனாகிய பவுல் கூறுவது, அன்னியபாஷையிலும் பேசாமல் இருக்கக்கடவர்கள் என்பதாகும். இதிலிருந்து தெளிவாகும் சத்தியம், அந்நியபாஷை வரம் ஆண்களுக்கு மட்டுமே கொடுக்கப்பட்ட வரம் [gift of tongues was limited to men and is never to be excercised by women]. மேலும் அப்போஸ்தலனாகிய பவுல் 1தீமோத்தேயு 2:11,12-ல், “ஸ்திரீயானவள் எல்லாவற்றிலும் **அடக்கமுடையவளாயிருந்து**, **அமைதலோடு** கற்றுக் கொள்ளக்கடவள். உபதேசம் பண்ணவும், புருஷன்மேல் அதிகாரஞ் செலுத்தவும், ஸ்திரீயானவளுக்கு நான் உத்தரவு கொடுக்கிறதில்லை; அவள் **அமைதலாயிருக்கவேண்டும்**” என்று வலியுறுத்துகிறார். அவர்கள் பெண்கள் மத்தியில் பெண்களுக்கு அல்லது சிறு பிள்ளைகளுக்கு போதிக்கலாம் ஆனால் புருஷர்கள் (ஆண்கள்) மேல் ஆதிக்கம் செலுத்தவோ, போதிக்கவோ, தலைமை வகிக்கவோ அனுமதி இல்லை.

இந்த இறைச்சத்தியத்தை இன்றைய தலைமுறையின் விசுவாசப் பெண்கள் புரிந்து கொண்டால் அல்லது பெண்கள் பேசுவதை ஊக்குவிக்கிற விசுவாச ஆண்கள் புரிந்து கொண்டால், அந்நியபாஷையில் பேசுகிற சபைகள் இன்று பெருமளவில் இல்லாமற்போகும். காரணம் இன்றைக்கு சபைகளில் அதிகம் அந்நியபாஷைகளில் பேசுகிறவர்கள் பெண்கள் தான். 1கொரி.14:28-ல் “**பேசாமல்**” என்கிற பதமும் 14:34ல் “**பேசாமலிருக்ககடவர்கள்**” என்கிற பதமும் ஒரே காரியத்தைக் குறிக்கிறது; அதாவது அந்நியபாஷையில் பேசாமல் இருக்கவேண்டும் என்பதைக் குறிக்கிறது. 1கொரி.14:34-36 வரையுள்ள வசனங்களைக் கவனியுங்கள்: *“சபைகளில் உங்கள் ஸ்திரீகள் பேசாமலிருக்ககடவர்கள்; பேசும்படிக்கு அவர்களுக்கு உத்தரவில்லை; அவர்கள் அமர்ந்திருக்கவேண்டும்; வேதமும் அப்படியே சொல்லுகிறது. அவர்கள் ஒரு காரியத்தைக் கற்றுக்கொள்ள விரும்பினால், வீட்டிலே தங்கள் புருஷரிடத்தில் விசாரிக்கக்கடவர்கள்; ஸ்திரீகள் சபையிலே பேசுகிறது அயோக்கிய மாயிருக்குமே. தேவவசனம் உங்களிடத்திலிருந்தா புறப்பட்டது? அது உங்களிடத்துக்கு மாத்திரமா வந்தது?”* ஆக பெண்கள் அந்நிய பாஷையில் மாத்திரமல்ல, சபையிலும் பேசாமலிருப்பதுதான் நல்லது; இதைத்தான் தேவனுடைய வசனமும் உறுதிப்படுத்துகிறது. மீறிப் பேசினால் அது அவர்களுக்கு அயோக்கியமாயிருக்கும்.

## தவறாக எடுத்துரைக்கப்படும் அல்லது திரித்துக்காட்டப்படும் வேத வசனங்கள் யாவை?

- "நான்...தூதர் பாஷைகளையும் பேசினாலும்" (1கொரி.13:1)
- "அந்நியபாஷையில் பேசுகிறவன்...தேவனிடத்தில் பேசுகிறான்" (1கொரி.14:2)
- "அந்நியபாஷையில் பேசுகிறவன் ஆவியினாலே இரகசியங் களைப் பேசினாலும்..." (1கொரி.14:2)
- "அந்நியபாஷையில் பேசுகிறவன் தனக்கே பக்திவிருத்தி உண்டாகப் பேசுகிறான்" (1கொரி.14:4)
- "நீங்கள் எல்லோரும் அந்நியபாஷைகளைப் பேசும்படி விரும்புகிறேன்" (1கொரி.14:5)
- "நான் அந்நியபாஷையிலே விண்ணப்பம் பண்ணினால்" (1கொரி.14:14)
- "நான் ஆவியோடும் விண்ணப்பம் பண்ணுவேன்" (1கொரி.14:15)
- "நீ நன்றாய் ஸ்தோத்திரம் பண்ணுகிறாய்" (1கொரி.14:17)
- "நான் அதிகமாய்ப் பாஷைகளைப் பேசுகிறேன், இதற்காக என் தேவனை ஸ்தோத்தரிக்கிறேன்" (1கொரி.14:18)
- "யாராவது அந்நியபாஷையிலே பேசுகிறதுண்டானால்" (1கொரி.14:27)
- "அந்நியப்பாஷைகளைப் பேசுகிறதற்கும் தடைபண்ணாதிருங்கள்" (1கொரி.14:39)

## அடையாள வரங்கள் குறிப்பிட்ட காலத்திற்கு மட்டும் அருளப்பட்டதா இல்லை இப்பொழுதும் இருக்கின்றதா?

தேவனுடைய வல்லமையோ அல்லது அவர் செய்யும் அற்புதமான செயல்களோ ஒருநாளும் மங்கிப்போனதில்லை. அவர் என்றென்றும் மாறாதவர் தாம் விரும்பின செயல்களை செயல்படுத்த அவருக்கு எப்பொழுதும் அதிகாரம் உண்டு. ஆனாலும் சில கிருபையின் வரங்களை ஒரு குறிப்பிட்ட காலக்கட்டத்திற்கு மட்டுமே தேவன் அளித்திருந்தார். அவைகள் தான் அற்புத அடையாள வரங்களாகும். [God does intervene in supernatural ways performing miracles when and wherever He pleases to do so. The matter before us now is whether or not the Bible teaches that certain gifts were temporarily given. The evidence of God's Word must be the final source of authority.]

இதை நான் இங்கே மேற்கோள் காட்டுவது இரண்டு காரணங்களுக்காக: **ஒன்று**, தேவனுடைய வார்த்தை என்ன கூறுகிறது என்று ஆராய்ந்து அறிந்துகொள்ள முயலாமல் தேவன் வல்லவர், சர்வ வல்லமையுள்ளவர், அவர் அரிய பெரிய காரியங்களை செய்கிறார், அற்புதங்களை செய்கிறார் என்று கூறிக்கொண்டு இன்றும் அடையாள வரங்கள் உண்டென்று அநேகர் விசுவாசிக்கிறார்கள். **இரண்டு**, புதிதாக இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்கள் மற்றும் தேவனுடைய வார்த்தையை சரியாக படிக்காதவர்கள் பிறர் கூறுவதையும் செய்வதையும் வேத வசனத்தின் பிரகாரம் சரியானதா இல்லையா என ஆராய்ந்தரியாமல் அப்படியே நம்பி விடுகிறார்கள்.

தேவன் தமது ஆவியானவர் மூலமாக சபைக்கு அருளிய அடையாள வரங்கள் நிரந்தரமானதா இல்லை ஒரு குறிப்பிட்ட காலக்கட்டத்திற்கு மட்டுமா? என்பதை சிந்திக்க இருக்கிறோம். இதற்கு சரியான பதிலையும் விளக்கத்தையும் அளிப்பதற்கு முழு அதிகாரம் உடையது தேவனுடைய வார்த்தை மட்டுமே. கிறிஸ்தவர்களின் செயல்பாடுகள் யாவும் வேதத்தின் அடிப்படையில்தான் இருக்க வேண்டுமே அல்லாமல் தங்களின் செயல்பாடுகளுக்கு தக்கதாக வேதத்தைப் புரட்டிக்கொள்ள கூடாது. அதனால் வேதம் உரைப்பதைக் கவனமாய் கவனிப்போமாக.

நாம் 1 கொரிந்தியர் 13-ஆம் அதிகாரத்திற்கு நம் கவனத்தைக் கொண்டு வருவோம். 1 கொரிந்தியர் 12 முதல் 14 வரை உள்ள அதிகாரங்களில் பவுல் அப்போஸ்தலன் ஆவிக்குரிய வரங்களை குறித்தும் அவைகள் எவ்வாறு உபயோகப்படுத்தப்பட வேண்டும் என்பதை குறித்தும் (விசேஷமாக அந்நியபாஷை வரத்தை உபயோகிக்கும் விதத்தை குறித்தும்) குறிப்பிடுகிறார். பவுல் 1கொரி.12:28-ல் தேவனானவர் சபையிலே **முதலாவது** அப்போஸ்த லரையும், **இரண்டாவதாக** தீர்க்கதரிசிகளையும், **மூன்றாவதாக** போதகர்களையும், **பின்பு** அற்புத வரங்களையும், **பின்பு** குணமாக்கும் வரங்களையும், ஊழியங்களையும், ஆளுகைகளையும், பலவித பாஷைகளையும் ஏற்படுத்தினார் என்று கூறுகிறார். பிறகு 29 மற்றும் 30 வசனங்களில் எல்லாருக்கும் எல்லா வரங்களும் அருளப்படவில்லை என்று கூறுகிறார். இறுதியாக, வசனம் 31-ல் "**இப்படியிருக்க, முக்கியமான வரங்களை நாடுங்கள்; இன்னும் அதிக மேன்மையான வழியையும் உங்களுக்குக் காண்பிக்கிறேன்**" என்று கூறி அதிகாரம் 13-க்கு அருமையான முகவுரை அளிக்கிறார்.

அப்போஸ்தலனாகிய பவுல் 13ஆம் அதிகாரம் முழுவதிலும் **அன்பை** பிரதானமான மற்றும் நிலையான காரியமாக மேற்கோள் காட்டி கூறும்போது, சில ஆவிக்குரிய வரங்களையும் சுட்டிக்காட்டி அவைகள் இல்லாமற்போகும் அன்பு மட்டும் தான் நிலையானது என்கிறார். 8 முதல் 10 வரையுள்ள வசனங்களில், "***அன்பு ஒருக்காலும் ஒழியாது, தீர்க்கதரிசனங்களானாலும் ஒழிந்துபோம், அந்நிய பாஷைகளானாலும் ஓய்ந்துபோம், அறிவானாலும் ஒழிந்துபோம். நம்முடைய அறிவு குறைவுள்ளது, நாம் தீர்க்கதரிசனஞ் சொல்லுதலும் குறையுள்ளது. நிறைவானது வரும்போது குறைவானது ஒழிந்துபோம்.***" என்று பவுல் உரைக்கிறார். அன்பு ஒன்று மட்டும் தான் எப்பொழுதும் நிலையாக நிலைத்திருக்கிறது; **தீர்கதரிசனங்களும்**, **அறிவும்**, **அந்நியபாஷையும்**, **அற்புத அடையாளங்களும்**, தேவனுடைய வார்த்தை முழுமையாக அதாவது தேவனுடைய முழு வெளிப்படுத்துதலும் கிடைத்த பிறகு அவசிய-மில்லை. பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளாக தேவன் நமக்கு தேவையானவற்றை பரிபூரணமாக 66 புத்தகங்களில் தந்திருக்கிறார். நமக்கு அருளப்பட்டிருக்கிற 66 புத்தகங்களோடு அதாவது முதல் புத்தகமாகிய ஆதியாகமத்திலிருந்து கடைசி புத்தகமான வெளிப்-படுத்தின விசேஷத்தோடு வெளிப்படுத்துதல் பரிபூரணமாயிற்று.

[There will always be the need for love, therefore love will never drop off. But when the canon of Scripture is made "perfect" [or complete], there will be no further revelation from God, neither in predictive prophecy nor in divinely revealed knowledge other than prophecy. The gifts of "prophecy" and "knowledge" will be entirely unnecessary with the completion of the Scriptures.]

ஆகவே முழுமையான அல்லது பரிபூரணமான நிலையிலே தேவனுடைய வார்த்தை நமக்கு கிடைக்கும் வரையில் அதை உறுதிப் படுத்துவதற்காக அற்புதங்களும், அடையாளங்களும் தேவைப்பட்டது. இதைத்தான் மாற்கு 16:20-ம் உறுதிப்படுத்துகிறது, "**அவர்கள் புறப் பட்டுப்போய், எங்கும் பிரசங்கம்பண்ணினார்கள். கர்த்தர் அவர் களுடனேகூடக் கிரியையை நடப்பித்து, அவர்களால் நடந்த அடையாளங்களினாலே வசனத்தை உறுதிப்படுத்தினார்.**" முதல் நூற்றாண்டின் இறுதியிலே வெளிப்படுத்தின விசேஷம் புஸ்தகம் எழுதப்பட்டதோடு அடையாள வரங்கள் நின்று போனது, அந்த வரங்களின் நோக்கம் நிறைவுக்கு வந்தது.

எனவே அந்நியபாஷை வரத்தையும் உள்ளடக்கி அனைத்து அடையாள வரங்களும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மட்டும் தான் அருளப்பட்டது, அவைகள் இப்பொழுது இல்லை.

## அந்நியபாஷை வரத்தை இன்று நாடுவது அல்லது வாஞ்சிப்பது சரியானதா?

அந்நியபாஷை வரத்தை இன்று நாடுவது அல்லது வாஞ்சிப்பது சரியானதா? என்கிற கேள்விக்கு, இந்த நான்காம் பாகத்தில் கொடுக்கப்பட்டிருக்கிற அனைத்து கேள்விகளையும் அவைகளுக்கு கொடுக்கப்பட்டிருக்கிற பதில்களையும் கவனத்தோடு வாசித்து ஆராய்ந்து பார்ப்பீர்களானால் நீங்களே இதற்கான பதிலை கொடுக்க முடியும். கொடுக்கப்பட்டிருக்கிற அனைத்து கேள்விகளின் ஒருமித்த பதில்தான் "**அந்நியபாஷை வரத்தை இன்று நாடுவது அல்லது வாஞ்சிப்பது வேதத்தின் அடிப்படையில் சரியானது அல்ல**". இருந்தபோதிலும், அநேகர் இன்று அந்நியபாஷையை நாடுவது ஏன்? என்கிற கேள்விக்கு அளித்திருக்கிற பதிலை கவனமாக வாசியுங்கள். நீங்களாகவே புரிந்துகொள்வீர்கள் அந்நியபாஷை வரத்தை நாடுவதும் வாஞ்சிப்பதும் சரியானதா? இல்லையா? என்று.

இன்று அந்நியபாஷை வரத்தை விரும்புபவர்கள் தயவுகூர்ந்து 1 கொரிந்தியர் 14 ஆம் அதிகாரத்தை பலமுறை வாசியுங்கள். இந்த அதிகாரத்திலே பவுல் அப்போஸ்தலன் முதல் 26 வசனங்களில் அந்நியபாஷை வரம் ஒரு முதன்மையான வரம் அல்ல என்றும் அந்நியபாஷை வரத்தை நாடாமல் அதனினும் மேலான வரத்தை நாடுங்கள் என்றும் கூறுகிறார். அதிலும் தீர்க்கதரிசன வரத்தை முதன்மைப்படுத்தி கூறியிருப்பதை நாம் தெள்ளத்தெளிவாக அறிந்துக் கொள்ள முடியும். அதனால் தான் 14ஆம் அதிகாரத்தின் முதல் வசனத்திலேயே "**அன்பை நாடுங்கள்; ஞானவரங்களையும் விரும்புங்கள்; விசேஷமாய்த் தீர்க்கதரிசன வரத்தை விரும் புங்கள்**" என்று பவுல் கூறுகிறார் (1கொரி.12:31-ஐயும் வாசியுங்கள்). இந்த விளக்கங்களே போதுமானவைகள் என எண்ணுகிறேன். ஆகவே, அந்நியபாஷை வரத்தை இன்று நாடுவதும் அல்லது வாஞ்சிப்பதும் வேதத்தின் அடிப்படையில் 100% சரியான தல்ல.

**கவனிக்கவும்**: நான் முன்னமே குறிப்பிட்டதுபோல, 1 கொரிந்தியர் 12 முதல் 14 வரை உள்ள அதிகாரங்களில் பவுல் அப்போஸ்தலன்

ஆவிக்குரிய வரங்களைக் குறித்தும் அவைகள் எவ்வாறு உபயோகப் படுத்தப்படவேண்டும் என்பதை குறித்தும் குறிப்பிடுகிறார். விசேஷமாக அந்நியபாஷை வரத்தைக்குறித்து அதிகமாகவே குறிப்பிடுகிறார், காரணம் அந்நியபாஷை வரத்தை சரியான விதத்திலே உபயோகம் செய்ய கொரிந்து சபையார் தவறியபடியினாலே அந்நியபாஷை வரத்தை எவ்வாறு உபயோகப்படுத்த வேண்டும் என்று அவர்களுக்கு விளக்கமாக பவுல் 14 ஆம் அதிகாரம் 27-வது வசனத்திலிருந்து குறிப்பிடுகிறார். ஆகையால் பவுல் அந்நியபாஷையின் முக்கியத்து வத்தையோ அல்லது எல்லோரும் அந்நியபாஷையைப் பேச வேண்டுமென்றோ கருத்தில்கொண்டு கூறவில்லை. காரணம் பவுலுக்கு அந்நியபாஷையைவிட மேலான வரங்களைக் குறித்து மிக நன்றாய் தெரியும்.

## அந்நியபாஷையில் பேசுவது ஆவிக்குரிய முதிர்ச்சியைக் காண்பிக்கிறதா?

தாங்கள் அந்நியபாஷைகளில் பேசுவதாக கூறிக்கொள்கிற அநேகர் தாங்கள் அப்படி பேசுவதற்கு கொடுக்கும் விளக்கங்களில் ஒன்றுதான் "**ஆவிக்குரிய முதிர்ச்சி**". அதாவது அந்நியபாஷையில் பேசுவது ஆவிக்குரிய முதிர்ச்சியைக் காண்பிக்கிறது என்று கூறிக் கொள்கிறார்கள். ஆனால் இது உண்மையல்ல; முற்றிலும் தவறான கூற்றாகும். அந்நியபாஷைகளில் பேசின கொரிந்து சபையாரைக் கண்டாலே இதற்குரிய பதிலை நாம் சொல்லி விடலாம். பவுலின் நாட்களில் அவர்களைப்போல அதிகமான நிலையில் பாவத்திலும், தவறாகப் புரிந்துகொள்ளுதலிலும், வழக்கிலும், சண்டை பண்ணு தலிலும், சாட்சியற்ற நிலையிலும் வாழ்ந்திருந்த வேறொரு சபையை நாம் காண முடியாது. அவர்கள் மாம்சத்திற்குரியவர்களாக (carnal) வாழ்ந்தார்களே அல்லாமல் ஆவிக்குரியவர்களாகவோ (spiritual) அல்லது ஆவிக்குரிய முதிர்ச்சியுள்ளவர்களாகவோ (spiritually matured) வாழவில்லை.

அந்நியபாஷையில் பேசுவது ஆவிக்குரிய முதிர்ச்சியைக் காண்பிப்பது அல்லவே அல்ல. கீழே கொடுக்கப்பட்டிருக்கிற எல்லா காரணங்களையும் குறிப்பிடப்பட்டிருக்கிற வசனங்களையும் கவனமாய் வாசித்து அறிந்துகொள்ளுங்கள்:

- 1கொரிந்தியர் 12:29,30-ல், எல்லாருக்கும் எல்லா வரங்களும் அருளப்படவில்லை என்பதை வாசிக்கிறோம். அதாவது, எல்லாரும் அப்போஸ்தலர்கள் அல்ல, எல்லாரும் தீர்க்கதரிசிகள்

அல்ல, எல்லாரும் போதகர்கள் அல்ல, எல்லாரும் அற்புதங்களை செய்யவில்லை, எல்லாரும் குணமாக்கும் வரங்களையுடையவர்கள் அல்ல, எல்லாரும் அந்நியபாஷையில் பேசவில்லை, எல்லாரும் வியாக்கியானம் பண்ணுகிறவர்கள் அல்ல. அப்படியானால் சிலர் மாத்திரமே அந்நியபாஷைகளில் பேசினார்கள்; அப்படியிருக்க அந்நியபாஷையில் பேசுவது ஆவிக்குரிய முதிர்ச்சியைக் காண் பிக்கிறது என்றால், சிலர் மட்டுமே ஆவிக்குரிய முதிர்ச்சியை அடைய முடியும். ஆனால் நமக்கு தெரியும் நம் கர்த்தர் எல்லாரும் ஆவிக்குரிய முதிர்ச்சியை அடைய வேண்டும் என்று தான் விரும்புகிறார். அவர் சிலருக்கு மட்டும் அவ்வித பாக்கியம் அருளி பட்சபாதம் காண்பிக்கவே இல்லை. பவுலும் கொரிந்தியருக்கு எழுதும்போது (3-ஆம் அதிகாரம்) எல்லாரும் ஆவிக்குரிய முதிர்ச் சியை அடையவேண்டும் என அறிவுறுத்துகிறார்.

- 1கொரி.13:10 ல், அந்நியபாஷைகளானாலும் ஓய்ந்துபோம் என்று கூறப்பட்டிருக்கிறது, அப்படியானால் நம்முடைய ஆவிக்குரிய முதிர்ச்சியும் ஓய்ந்துபோகுமா? ஒருபோதும் ஓய்ந்துபோகாது இம்மையில் மாத்திரமல்ல மறுமையிலும் யுக யுகமாக தேவனுடைய சமுகத்தில் ஆவிக்குரிய வாழ்விலே முதிர்ந்தவர்களாய் சதா காலமும் அவருக்கு பிரியமான ஆராதனையும் ஸ்தோத்திரத் தையும் புகழ்ச்சியையும் ஏறெடுப்போம்.

- பவுல் 1கொரி.14:1ல், அன்பை நாடுங்கள்; ஞானவரங்களையும் விரும்புங்கள்; விசேஷமாய்த் தீர்க்கதரிசன வரத்தை விரும்புங்கள் என்று கூறுகிறார் (1கொரி.12:31-ஐயும் வாசியுங்கள்). அந்நிய பாஷையில் பேசுதல் ஆவிக்குரிய வாழ்வின் முதிர்ச்சி என்றால் ஏன் பவுல் அந்நியபாஷை வரத்தை நாடுங்கள் என்று கூறவில்லை? கொரிந்து சபை விசுவாசிகள் ஆவிக்குரிய வாழ் விலே முதிர்ச்சியடைவதை பவுல் விரும்பவில்லையா? சிந்தியுங்கள்.

- சபைகளுக்கும், தனிப்பட்ட நபர்களுக்குமாக பவுல் 13 நிருபங்களை (எபிரெயருக்கு எழுதிய நிருபத்தை உட்படுத்தாமல்) எழுதினார்; இவைகளில் கொரிந்து சபையாருக்கு எழுதிய முதலாம் நிருபத்தில் மட்டுமே (ஏற்கனவே நான் இதைக் குறிப்பிட்டிருக்கிறேன் அவர் களுடைய தவறை திருத்துவதற்காக அதாவது அந்நியபாஷை வரத்தை எப்படி உபயோகிக்க வேண்டுமென சில விதிமுறைகளை எடுத்துரைப்பதற்காக) பவுல் அப்போஸ்தலன் அந்நியபாஷையை பற்றி குறிப்பிடுகிறார். வேறு எந்த சபைக்கும், அல்லது தனிப்பட்ட நபருக்கும் பவுல் அப்படி அந்நியபாஷையைப்பற்றி ஒன்றுமே

கூறவில்லை. பவுல் எல்லோருமே ஆவிக்குரிய முதிர்ச்சியை அடைய வேண்டுமென விரும்பினார், அந்நியபாஷையில் பேசுதல் ஆவிக்குரிய வாழ்வின் முதிர்ச்சி என்றால் நிச்சயமாக தாம் எழுதிய அனைத்து நிருபங்களிலும் சபைகளுக்கும், தனிப்பட்டவர்களுக்கும் அந்நியபாஷையை குறித்துக் குறிப்பிட்டிருப்பார்.

❖ யோவான், பேதுரு, யாக்கோபு மற்றும் யூதா போன்றவர்களும் சபைகளுக்கு நிருபங்களை எழுதினார்கள். அந்நியபாஷையில் பேசுதல் ஆவிக்குரிய வாழ்வின் முதிர்ச்சி என்றால் நிச்சயமாக அவர்களும் அந்நியபாஷையின் வரத்தை குறித்து மேற்கோள் காட்டியிருப்பார்கள். ஆனால் ஒருவரும் அப்படி குறிப்பிடவில்லை.

## "அந்நியபாஷைகளானாலும் ஓய்ந்துபோம்" என்பதின் அர்த்தம் என்ன?

அப்போஸ்தலனாகிய பவுல் 1கொரிந்தியர் 13-ஆம் அதிகாரம் முழுவதிலும் **அன்பை** பிரதானமான, நிலையான காரியமாக மேற்கோள் காட்டி கூறும்போது, மூன்று ஆவிக்குரிய வரங்களை மட்டும் சுட்டிக்காட்டி அவைகள் இல்லாமற்போகும் அன்பு மட்டும் தான் நிலையானது என்கிறார். 1கொரி. 13:8-10-ல், *"அன்பு ஒருக்காலும் ஒழியாது, தீர்க்கதரிசனங்களானாலும் ஒழிந்துபோம்,* ***அந்நியபாஷை களானாலும் ஓய்ந்துபோம்****, அறிவானாலும் ஒழிந்துபோம். நம்முடைய அறிவு குறைவுள்ளது, நாம் தீர்க்கதரிசனஞ் சொல்லுதலும் குறையுள்ளது. நிறைவானது வரும்போது குறைவானது ஒழிந்துபோம்"* என்று கூறுகிறார். அப்படியானால், "**ஓய்ந்துபோம்**" என்பதின் அர்த்தம் தான் என்ன? எப்பொழுது அந்நியபாஷை ஓய்ந்துபோம்? என்கிறதான கேள்விகள் நம் சிந்தனைகளில் எழுவது சாத்தியமே. இவைகளைக் குறித்து நாம் இங்கே ஆராய்வோம்.

நிலைத்திருக்க கூடியதும், குறிப்பிட்ட காலத்திற்கு பிறகு இல்லாமற்போக கூடியதுமாகிய காரியங்களை இந்த அதிகாரத்திலே (1கொரிந்தியர் 13) பவுல் குறிப்பிடுவதை நாம் அறிந்துகொள்ளலாம். அவைகளில், பவுல் நிலைத்திருப்பதாக மூன்று காரியங்களையும் (**விசுவாசம், நம்பிக்கை, அன்பு** — வசனம் 13), குறிப்பிட்ட காலத்திற்கு பிறகு இல்லாமற்போக கூடியதுமாக மூன்று காரியங்களையும் (**தீர்க்கதரிசனம், அந்நியபாஷை, அறிவு** — வசனம் 8) குறிப்பிடுகிறார். தீர்க்கதரிசனம் மற்றும் அறிவு "**ஒழிந்துபோம்**" என்று கூறப்பட்டி ருக்கிறது; இவை எடுத்துரைப்பது என்னவென்றால் தீர்க்கதரிசன நிறை வேறுதலும், சத்தியத்தை அறிகிற அறிவுமாகும். ("if there are

prophecies they will be fulfilled and done with...if there is knowledge it will be swallowed up in truth" 1Cor. 13:8 J.B.Phillips translation].

பவுல் இங்கே அந்நியபாஷையைக் குறித்து கூறும்போது வேறே பதத்தை உபயோகிக்கிறார். அதாவது தீர்க்கதரிசனம் மற்றும் அறிவை குறித்து கூறும்போது "**ஒழிந்துபோம்**" என்றும் அந்நியபாஷையைக் குறித்து கூறும்போது "**ஓய்ந்துபோம்**" என்றும் குறிப்பிடுகிறார். கிரேக்க மொழியில் "**பாசோண்டாய்**" [pausontai] என்கிற வார்த்தை பயன் படுத்தப்பட்டிருக்கிறது; இந்த பதம் செய்வினையும் அல்ல செயப்பாட்டு வினையும் அல்ல மாறாக இரண்டிற்கும் இடைப்பட்ட நடுவினையாக வருகிறது [neither active voice nor passive voice but middle voice]. இந்த பயன்பாடு அபூர்வம் இது கிரேக்க மொழியின் சிறப்பாகும். இங்கே பயன்படுத்தப்பட்ட வார்த்தையின் அர்த்தம் "**நிரந்தரமாக நின்று போகும் அல்லது செயலிழந்து போகும்**" என்பதாகும். அதாவது "**தன்னிச்சையாகவே அது நின்று போகும் மீண்டும் எழுந்திராது**" என்பது பொருள்.

[Pauo-means **"to cease permanently"**. It implies that when tongues ceased, they would never start up again. Pauo, however, appears in the Greek middle voice, which here seems to signify a reflexive action: The gift of tongues will "stop itself" or "Tongues shall cut themselves off". It is very interesting to note that here for the tongues, Paul has used another word and also changed the voice. It is the **future middle form, "pausontai"** meaning **"shall stop [themselves]" or "shall cease [themselves]"**. Thus "pausontai" very strongly implies that the tongues will stop by themselves, without the activity of an outside agency; they would never start up again and "it shall cut themselves off".]

இப்பொழுது நீங்கள் "**ஓய்ந்துபோம்**" என்பதின் அர்த்தத்தை அறிந்துகொண்டிருப்பீர்கள் என்று நம்புகிறேன். இனி எப்பொழுது அந்நியபாஷை ஓய்ந்துபோம்? என்கிற கேள்விக்கும் நாம் பதிலை ஆராய்வோம். 1கொரி.13:10-ல், பவுல் "**நிறைவானது**" வரும்போது குறைவானது ஒழிந்துபோம் என்று கூறுகிறார். ஆக நிறைவானது எப்பொழுது வருகிறதோ அப்பொழுது குறைவானதாகிய (அன்னிய பாஷையையும் உள்ளடக்கி) யாவும் ஒழிந்துபோம். நிறைவானது என்ன என்பதைக் குறித்து அடுத்த கேள்வியின் பதிலை வாசித்து ஆராய்ந்து பாருங்கள்.

## "**நிறைவானது**" என்றால் என்ன?

ஏற்கனவே நான் குறிப்பிட்டதுபோல அப்போஸ்தலனாகிய பவுல் 1கொரிந்தியர் 13-ஆம் அதிகாரம் முழுவதிலும் **அன்பை** பிரதானமான மையப்பொருளாக வைத்து அன்பினுடைய நிலையான தன்மையை விளக்கி கூறுகின்றபோது, மூன்று ஆவிக்குரிய வரங்களையும் (தீர்க்கதரிசனம், அந்நியபாஷை, அறிவு) சுட்டிக்காட்டி அவைகள் இல்லாமற்போகும் அன்பு மட்டும் தான் நிலைத்திருக்கும் என்கிறார். அந்தப்படியே, 8 முதல் 10 வரையுள்ள வசனங்களில், "அன்பு ஒருக்காலும் ஒழியாது, தீர்க்கதரிசனங்களானாலும் ஒழிந்துபோம், அந்நிய பாஷைகளானாலும் ஓய்ந்துபோம், அறிவானாலும் ஒழிந்துபோம். நம்முடைய அறிவு குறைவுள்ளது, நாம் தீர்க்கதரிசனஞ் சொல்லுதலும் குறையுள்ளது. **நிறைவானது வரும்போது குறைவானது ஒழிந்துபோம்**" என்று கூறுகிறார். எனவே பரிபூரணமானது வரும்போது பரிபூரணமற்றது காணாமல் போய்விடும் ["When the perfection comes the imperfect disappears", NIV. "When the complete comes, that is the end of the incomplete", J.B. Phillips' translation].

அப்படியானால் "**நிறைவானது**" அல்லது "**பரிபூரணமானது**" என்பது என்ன என்கிற கேள்வி நம்மெல்லாருடைய மனதிலும் எழுகிறது. நிறைவானது எது என்பதை நாம் கண்டறிந்து விட்டால் பிறகு எப்பொழுது குறைவானது இல்லாமற்போனது என்பதை எளிதில் அறிந்து கொள்ளலாம். இங்கே இதற்கான பதிலை வேத வசனத்தின் ஆதாரத்திலே ஆராய்வோம் வாருங்கள். நிறைவானதைக் குறித்து வேத ஆராய்ச்சியாளர்களிடையே வெவ்வேறு கருத்து பாங்குகள் உள்ளன, அவைகளை முதலில் குறிப்பிடுகிறேன் பின்பு எது சரியானது என்பதை ஆராயலாம். ஏறக்குறைய ஐந்து கருத்து பாங்குகள் உள்ளன, அவைகள் இதோ:

- நிறைவானது என்பது "**கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை**" குறிக்கிறது. அவர் வருகையின் போது குறைவானது ஒன்றுமே இருக்காது.
- நிறைவானது என்பது "**பரலோகத்தை**" குறிக்கிறது. பரலோகம் மட்டுமே நிறைவானது மற்றவை யாவும் நிறைவானதல்ல.
- நிறைவானது என்பது வரப்போகிற "**நித்தியத்தை**" குறிக்கிறது. அங்கே சகலமும் பரிபூரணமாயும் நிரந்தரமாயும் இருக்கும்.
- நிறைவானது என்பது "**விசுவாசிகளின் ஆவிக்குரிய முதிர்ச்சியை**" குறிக்கிறது. [இது ஒரு ஒப்புநோக்கு முறையிலான வாக்குவாதம். It is relative or supportive argument].

❖ நிறைவானது என்பது "**தேவனுடைய வார்த்தையை**" குறிக்கிறது. அதாவது 66 புத்தகங்கள் அடங்கிய தேவனுடைய பரிபூரண வெளிப்பாடான பரிசுத்த வேதாகமத்தை குறிக்கிறது.

மேலே கூறப்பட்டிருக்கிற ஐந்து கருத்துகளில் எது சரியானது என்பதை நாம் அறிந்துக்கொள்ள வேண்டியது மிக அவசியம். ஐந்துமே சரியானது தான் என்பது போல தோன்றினாலும் ஐந்தில் ஒன்று மட்டுமே சரியானது. ஆகவே குழப்பத்திற்கு இடங்கொடாமல், குறிப்பிட்டிருக்கிற வேத ஆதாரங்களையும் கூறப்பட்டிருக்கிற கருத்துக்களையும் கருத்தோடு வாசித்து தியானியுங்கள்.

மேலே கூறப்பட்டிருக்கிற ஐந்து கருத்துகளில் ஐந்தாவது தான் சரியானது. அதாவது நிறைவானது என்பது "**பரிபூரணமான அல்லது நிறைவான தேவனுடைய வார்த்தையை**" குறிக்கிறது (the completion of the written word of God). அதாவது 66 புத்தகங்கள் அடங்கிய தேவனுடைய பரிபூரண வெளிப்பாடான பரிசுத்த வேதாகமத்தை குறிக்கிறது. நாம் இங்கே இந்த நிருபம் எழுதப்பட்ட சந்தர்ப்பத்தையும், நோக்கத்தையும் சரியாக புரிந்துகொள்ள வேண்டும். பவுல் இந்த அதிகாரத்தில் அன்பையும் அதனுடைய மேலான தன்மையையும் குறித்து கூறுகிறார். அதற்காக அவர் கொண்டு வரும் ஒப்பீடு தான் மூன்று வரங்கள். இந்த வரங்கள் எல்லாம் ஒருநாள் ஒழிந்துபோம் ஆனால் அன்பு ஒருநாளும் ஒழிந்துபோகாது எனக் குறிப்பிடுகிறார். ஆகையால், இயேசு கிறிஸ்துவின் வருகையையோ, பரலோகத்தையோ, நித்தியத்தையோ, விசுவாசிகளின் முதிர்ந்த நிலையைப் பற்றியோ பவுல் குறிப்பிடவில்லை. மாற்கு சுவிசேஷம் 16:20-ம் இதையேதான் உறுதிப்படுத்துகிறது: "அவர்கள் புறப்பட்டுப் போய், எங்கும் பிரசங்கம்பண்ணினார்கள். கர்த்தர் அவர்களுடனே கூடக் கிரியையை நடப்பித்து, அவர்களால் நடந்த அடையாளங்களினாலே **வசனத்தை உறுதிப்படுத்தினார்**." தேவனுடைய வசனத்தை உறுதிப்படுத்துவதற்காக அடையாளங்கள் கொடுக்கப்பட்டதென்றால், பரிபூரணமான நிலையிலே வசனம் கிடைத்தபிறகு அல்லது வசனம் உறுதிப்படுத்தப்பட்டபிறகு அடையாளங்கள் தேவையா? மெய்யாகவே அதனின் அவசியம் இல்லை. எனவே "**நிறைவானது**" என்பது முழுமையான நிலையில் 66 புத்தகங்களாக பரிசுத்த வேதாகமம் நமக்கு கிடைத்ததையே காட்டுகிறது.

மேலும், இதையல்லாமல் (5-வது கருத்து) பிற கருத்துக்களை ஏற்றுக்கொள்ள இயலாத மற்றொரு காரணம், "**நிறைவானது**" என்கிற வார்த்தையின் கிரேக்க மொழி இலக்கணமும் அதன் பயன்பாடும் இதை நமக்கு தெளிவாக்குகிறது. "**நிறைவானது**" ["**டெலியோன்**" teleion] என்னும் பதம் மூல பாஷையிலே அதாவது கிரேக்க பாஷையிலே "**பலவின்பாலில்**" [neuter gender] பயன்படுத்தப் பட்டிருக்கிறது [adjective, neuter, singular, nominative]. "**நிறைவானது**" இயேசு கிறிஸ்துவின் வருகையைக் குறிப்பதாக இருந்தால் ஆண்பாலில் தான் இலக்கண பயன்பாடு அமைந்திருக்க வேண்டும். மேலும், நமக்கு தெரியும் பரலோகம் நம்மிடம் வராது நாம் தான் அங்கே போகவேண்டும். அதுமட்டுமல்லாமல் "**நிறைவானது**" என்கிற பதம் புதிய ஏற்பாட்டிலே ஏறக்குறைய 18 முறை பயன்படுத்தப் பட்டிருக்கிறது; ஒரு இடத்திலேயும் இயேசுவின் வருகையைக் குறித்தோ அல்லது பரலோகத்தின் வருகையைக் குறித்தோ கூறவில்லை.

சபையானது குழந்தை பருவத்தில் இருந்த நாட்களில் அதுவும் புதிய ஏற்பாட்டு புஸ்தகங்கள் முழுவதும் இல்லாத நாட்களில் அற்புதங்களும் அடையாளங்களும் தேவைப்பட்டது; அதனால் அநேகர் கிறிஸ்துவை விசுவாசித்து இரட்சிக்கப்படவும் சபையிலே அங்கம் பெற்று ஒருமித்து கர்த்தருக்குள்ளாக வளரவும் அது வழி வகுத்தது. புதிய ஏற்பாட்டு புஸ்தகங்கள் முழுமையாக இல்லாமல் இருப்பினும் அற்புதங்களும் அடையாளங்களும் கேட்போரை விசுவாசிக்கும்படி செய்தது. அதனால்தான் பவுல் அந்நியபாஷைகள் விசுவாசிகளுக்கு அடையாளமாயிராமல், அவிசுவாசிகளுக்கு அடையாளமாக இருக்கிறது என்று கூறினார் (1கொரி.14:22). இதில் நாம் குழப்பமடைவதற்கு ஒன்றுமில்லை, புதிய ஏற்பாட்டின் பிற வேதப்பாகங்களில் வரக்கூடிய "**நிறைவானது**" "**பூரணமானது**" "**பரிபூரணமானது**" ஆகிய பதங்களை வாசித்தால் நாம் அறிந்து கொள்ளலாம் அவையாவும் "**தேவனுடைய வார்த்தையை**" மட்டுமே குறிக்கிறது (யாக்கோபு 1:25; 2தீமோ. 3:16-17).

மேற்கூறியவைகள் எல்லாவற்றிலிருந்தும் நாம் தெளிவாக அறிந்துகொள்ளும் சத்தியம் இதுவே: "**நிறைவானது**" **வரும் போது என்பது கர்த்தருடைய வார்த்தை பரிபூரணமாக தொகுக்கப்படும் போது என்பதாகும்**. வெளி.22:18-20-ல், வாசிப்பதுபோல எழுதி தொகுக்கப்பட்டு இருக்கிற புஸ்தகத்தில் இருந்து இனி யாரும் கூட்டவும் கூடாது எடுக்கவும் கூடாது. உள்ளதை உள்ளபடியே

விசுவாசித்து ஏற்றுக்கொண்டு கர்த்தருடைய வருகைக்கு நம்மை ஆயத்தப்படுத்திக்கொள்ள வேண்டும். எபிரெயர் முதலாம் அதிகாரம் முதல் மூன்று வசனங்களும் இதையே வலியுறுத்துகின்றன; பூர்வ காலங்களில் (பழைய ஏற்பாட்டு காலத்தில்) பங்குபங்காகவும் வகை வகையாகவும் கிடைக்கப்பெற்ற தேவனுடைய வெளிப்படுத்துதல் இந்த இறுதி நாட்களில் (புதிய ஏற்பாட்டு காலத்தில்) இயேசு கிறிஸ்துவில் பரிபூரணமானது."

## அநேகர் இன்று அந்நியபாஷையை நாடுவது ஏன்?

அந்நியபாஷை வரம் மட்டுமின்றி வேறு அநேக கிருபையின் வரங்களும் பரிசுத்த ஆவியானவராலே சபையின் பக்திவிருத்திக்கு ஏதுவாக விசுவாசிகளுக்கு அருளப்பட்டிருப்பதை நாம் வேதத்தி லிருந்து தெளிவாக தெரிந்து கொள்ளலாம். அப்படியிருக்கையில் இன்று அநேகர் நாங்கள் அந்நியபாஷையில் பேசுகிறோம் என்பதற்கும், அந்நியபாஷையை மாத்திரம் முதன்மையான வரமாக கருதி நாடுவதற்கும் என்னதான் காரணமாக இருக்கும்? இதற்கான காரணங்கள் என்ன என்றறிவதற்காக நான் சில நண்பர்களோடும், அந்நியபாஷகளில் பேசுகிற வகுப்பில் சேர்ந்தவர்களோடும் நேரடியாக கலந்துரையாடினேன். அதனுடைய சுருக்கத்தை உங்களுடைய கவனத்திற்காகவும் நீங்களும் அறிந்துக்கொள்ள வேண்டுமென்பதற்காகவும் இங்கே குறிப்பிடுகிறேன்:

- சபை போதகர்களின் போதகத்தினாலே வஞ்சிக்கப்பட்டு இழுப்புண்டு போனதினால் இன்று அநேகர் இவ்வரத்தை வாஞ்சிக்கிறார்கள். அதாவது அந்நியபாஷை வரம் இல்லாத ஒரு கிறிஸ்தவ வாழ்க்கையை யூகித்துக்கூட பார்க்கமுடியாத நிலை.
- தங்களின் ஆவிக்குரிய வளர்ச்சியைக் குறித்த தவறான மனப்பான்மை உடையவர்களாக இருப்பதினால் இன்று அநேகர் இந்த வரத்தை விரும்புகிறார்கள். அதாவது அந்நியபாஷையில் பேசுவது மட்டும்தான் ஆவிக்குரிய வாழ்வின் முதிர்ச்சியை வெளிப்படுத்துகிறது என்கின்ற எண்ணம்.
- தங்களுடைய சுய-மேட்டிமைக்காகவும், தங்களை மிகைப்படுத்தி கூறிக்கொள்வதற்காகவும் நான் அந்நியபாஷையிலே பேசுகிறேன் என்கிறார்கள். அதாவது நான் மட்டும் பேசாமல் இருந்தால் நான் ஆவி (ஆவியானவர்) இல்லாதவனாகவும், ஆவியின் நிறை வில்லாதவனாகவும் தள்ளப்படுவேன் என்கிற பதட்டம்/அச்சம்.
- அநேகர் இவ்வரத்தை நாடிப்போகிறார்கள் அதனால் நானும் இவ்வரத்தை வாஞ்சிக்கிறேன். குருடனோடு குருடனாக குழியில் விழுந்த கதை.

- நான் எனது சக விசுவாசிகளின் வாழ்க்கையால் தொடப்பட்டேன். அதாவது பிற விசுவாசிகள் பேசுவதைக் கண்டு தானும் பேச வேண்டும் என்கிற தணியாத ஆசையில் வீழ்ந்தவர்கள்.
- நிர்பந்தத்தினால் பேசுதல். அதாவது தான் அங்கம் வகிக்கும் சபை கூடிவரவில் உள்ள போதகராலோ விசுவாசிகளாலோ அல்லது குடும்ப நபர்களாலோ பேசும்படி உந்தித்தள்ளப்பட்டு வற்புறுத்துதல் நிமித்தம் பேசுகிறார்கள்.
- எனக்கு அந்நியபாஷை பேசுவது மிக சுலபம் அதனால் பேசுகிறேன். அதாவது வேறு வரங்களை நான் பெற்றிருக்கிறேன் என்று கூறினால் அது எனக்கு சங்கடமாகவும், நான் பொய்யன் என்று புலனாகும் என்கிற பயம்.
- தன் வாழ்வின் முன்னேற்றத்திற்காகவும் ஆசீர்வாதத்திற்காகவும் பேசுகிறேன். அதாவது தனிப்பட்ட வாழ்வில் தேவனுடைய தாரா ளமான உலக ஆசிர்வாதத்தினை பெற வேண்டுமெனில் அந்நிய பாஷையிலே பேசவேண்டும், அந்நியபாஷையிலே ஜெபிக்க வேண்டும் என்கிற மனக்குழப்பம்.
- நான் அந்நியபாஷையிலே பேசவில்லை என்றால் சபைக்கு புறம்பாவேன் / புறம்பாக தள்ளப்படுவேன். அதாவது கூட்டத்தோடு சேர்ந்து அல்லேலூயா சொல்லவேண்டிய நிலை.

இன்னும் அநேக காரியங்கள் இருக்கின்றன. மேற்கூறியவைகள் உங்களின் சிந்தனைக்கு போதுமானவைகளாக இருக்கும் என்று நம்புகிறேன். தயவு கூர்ந்து சிந்தியுங்கள் இப்படிப்பட்டவர்களுக்காக ஜெபியுங்கள். கர்த்தர் இவர்களிடையில் மனந்திரும்புதலை (கள்ள உபதேசங்களில் இருந்து) கொண்டுவருவாராக.

பிரியமானவர்களே, இத்துடன் இந்த நான்காம் பாகம் நிறைவுக்கு வருகிறது. முதலாம் பாகத்தில் "**அந்நியபாஷையை குறித்த தவறான கருத்துக்கள்**" என்கிற தலைப்பின் கீழ் கொடுக்கப் பட்டிருக்கிற நான்கு காரியங்களையும் (பரிசுத்த ஆவியானவருடைய ஞானஸ்நானம், பரிசுத்த ஆவியானவரின் நிறைவு, ஆவியின் கனி, விசுவாசத்தின் அடையாளம்) ஒருவிசை இந்த பாகத்தோடு சேர்த்து வாசியுங்கள். எல்லாம் வல்ல தேவன்தாமே உங்களுக்கு வேண்டிய சகல ஞானத்தையும், அறிவையும், புரிந்து கொள்ளுதலையும் தந்து எழுதப்பட்டவைகளை புரிந்துகொள்ளவும் அதினால் நீங்களும், உங்களால் பிறரும் ஆசீர்வாதமடைய உதவி புரிவாராக.

பாகம் V

## அந்நியபாஷை இன்று

இன்று அந்நியபாஷைகளில் பேசுகிறவர்கள் அந்நியபாஷையின் வரத்தைக்குறித்து தேவனுடைய வார்த்தை அளிக்கும் விளக்கங்களில் இருந்து விலகி வெகுதூரம் சென்று விட்டார்கள். அநேக போதகர்கள் கர்த்தருடைய வேதத்தை நிதானித்து அறியாமல் தங்களுக்கு உகந்த வகையில் வியாக்கியானம் செய்துகொண்டு திருமறையின் அடிப்படை உபதேசங்களிலிருந்து விலகிச்சென்று மாறுபாடான உபதேசங்களைப் போதிக்கிறார்கள். இவர்கள் ஒருபுறம் இருக்க மறுபுறத்தில் கர்த்தருடைய வேதம் என்ன சொல்லுகிறது என்று ஆராய்ந்து அறியாமல் காண்கின்றதையும் கேட்கின்றதையும் அப்படியே ஏற்றுக்கொண்டு முழுமனதோடே அநேகர் விசுவாசிக்கிறார்கள்.

தேவனாலே மறுபடியும் பிறந்த ஒரு தேவனுடைய மனுஷன் தேவன் அருளும் சத்தியத்தின் வெளிச்சத்திலே அந்நியபாஷை வரம் இன்று நடைமுறையில் இல்லை என்பதை நிதானித்தறிந்து அந்நிய பாஷையில் பேசுகிற அனைத்து சம்பவங்களையும் செயல்களையும் பகுத்து அறியக்கூடியவனாகவும் காணப்படவேண்டும். முதலாம் நூற்றாண்டின் இறுதியிலே அந்நியபாஷை வரம் நின்று போனது என்று கூறும்போது, இன்றும் நடைமுறையில் அந்நியபாஷை வரம் இருக்கிறது என்று கூறுபவர்களிடமும் நம்மோடு மெய்யான சந்தேகத்தோடு கேட்கும் விசுவாசிகளுக்கும் சரியான பதிலளிக்க நாம் எப்பொழுதும் ஆயத்தமுள்ளவர்களாய் இருக்கவேண்டும்.

இன்று பேசப்படுகிற அந்நியபாஷை வேதத்தில் கூறப்பட்டிருக்கிற அந்நியபாஷை இல்லையென்றால், பிறகு இந்த செயல் எப்படி உருவானது? யார் இதைக் கொண்டு வந்தது? இதற்கு மூல காரணம் என்ன? என்கிற கேள்விகளுக்கு நாம் பதில்களை அறிந்துகொள்ள வேண்டியது மிக அவசியமானதொன்றாகும். எனவே இந்த கேள்வி களுக்கான பதில்களை ஆராய்வோம்.

1901 ஆம் ஆண்டு புதுவருட பெருநிகழ்ச்சியின் முன்னனை பொழுதிலே, டொபெகாவில் உள்ள "**பெத்தேல் வேதாகம கல்லூரியில்**" மாணவியாக படித்துக்கொண்டிருந்த **ஆக்னஸ் ஓஸ்மான்** என்னும் பெயருடைய சகோதரி, கல்லூரியின் முதல்வர் **சார்லஸ் பர்காம்** அவர்களிடம் தான் பரிசுத்த ஆவியானவருடைய ஞானஸ்நானத்தைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக அவருடைய

கைகளை தன்மேல் வைத்து ஜெபிக்கும்படி கேட்டுக்கொண்டார். அவர் அப்படி கைகளை வைத்து ஜெபித்தபோது, உடனே ஆக்னஸ் ஒஸ்மான் ஒருவரும் புரிந்துகொள்ள இயலாத உச்சரிப்புகளை உச்சரிக்க ஆரம்பித்தார். உச்சரிப்பை கேட்ட ஒருவருக்கும் ஒன்றுமே புரியவில்லை எல்லாமே அறியாததாக இருந்தது. பின்பு சகோதரி ஆக்னஸ் ஒஸ்மான் அவர்களுக்கு விளக்கமாக கூறினார்: அதாவது பரிசுத்த ஆவியானவர் அவர்மேல் வந்ததாகவும், அதன் பலனாக அவர் ஒருவருக்கும் புரியாத (இது அவருக்கும் புரியவில்லை என்பது கூடுதல் விவரம்) உச்சரிப்புகளினாலே அந்நியபாஷையில் பேசினதாகவும் கூறினார். மேலும் அவருடைய கல்லூரி படிப்பின் போது அவருடைய வகுப்பில் உள்ள அனைவருக்கும் "**பரிசுத்த ஆவியானவருடைய ஞானஸ்நானம்**" என்கிற தலைப்பிலே வீட்டு பாடம் (Home Work) கொடுக்கப்பட்டது. ஆக்னஸ் ஒஸ்மான் சகோதரியும் வீட்டு பாடம் செய்துகொண்டு போனார்; அதிலே அவருடைய முடிவுரையில் **அந்நியபாஷையில் பேசுதல்தான் பரிசுத்த ஆவியானவருடைய ஞானஸ்நானம் பெற்றதன் அடையாளம்** என்று குறிப்பிட்டிருந்தார். இதற்காக அவர் கல்லூரி நிர்வாகத்தினாலே பரிசு பெற்றதோடு அனைவராலும் சக மாணவர்களாலும் வெகுவாக கவுரவிக்கப்பட்டார்.

(On New Year's Eve, 1901, at the **Bethel Bible college** of Topeka, Kansas, a student named **Agnes Ozman** asked **Rev. Charles Parham** the head of the college to lay his hands on her head and pray that she might receive the baptism of the spirit. When he did so, immediately Miss. Ozman spoke fluently in syllables, which no one understood. She herself later explained that, "The Holy Spirit fell upon me and I began to speak in tongues" Moreover during the time of her study in Bethel Bible college, all the students including her were given an assignment on the **"Baptism of the Holy Spirit"**. Ozman brought her conclusion in her assignment by stating; **the result of the baptism of the Holy Spirit is speaking in tongues.** Later she was rewarded and honoured among the students.)

**கவனிக்கவும்**: இரண்டாம் நூற்றாண்டில் இருந்து 1901 ஆம் ஆண்டு வரை அநேக நூற்றாண்டுகளாக சபையின் வரலாற்றிலே அந்நிய பாஷையில் பேசினதாக வாசனைச்சுவடுகள் கூட இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. Since 2nd century A.D. till the 1901 A.D there was not even a smell of speaking in tongues down through the centuries.

இப்படியாக அந்நியபாஷைகளில் பேசக்கூடிய **நவீன பெந்தெகொஸ்தே புரட்சி** உண்டானது. இது படிப்படியாக வளர ஆரம்பித்தது. முதலாவது டொபெகாவில் தோன்றி பின்பு ஹவுஸ்டன், டெக்சாஸ், லாஸ் ஏஞ்செல்ஸ் என்று ஒரு பெரிய சமஸ்தானமாக உருவெடுக்க ஆரம்பித்தது. இன்று உலகின் நாலா பாகங்களிலும் படர்ந்து விரிந்து மலிந்து கிடக்கிறது.

## அந்நியபாஷை நின்றுபோய் விட்டது

நான்காம் பாகத்தில், "அந்நியபாஷைகளானாலும் ஓய்ந்துபோம்" என்பதின் அர்த்தம் என்ன? மற்றும் "நிறைவானது" என்றால் என்ன? ஆகிய கேள்விகளுக்குரிய பதில்களை வாசித்திருப்பீர்கள் என்று கருதுகிறேன். எனவே அவைகளையே மீண்டும் இங்கே விவரிக்க விரும்பவில்லை; இருப்பினும் சில காரியங்களை மேற்கோள்காட்டி கி.பி. 100-ஆம் ஆண்டின் இறுதியில் அந்நியபாஷை வரம் **ஓய்ந்துவிட்டது** அதாவது **நின்றுவிட்டது** என்பதை வலியுறுத்த விரும்புகிறேன். புதிய ஏற்பாட்டின் சாட்சிகளும் சபையின் சரித்திரமும் அந்நியபாஷை வரம் கி.பி. 100-ஆம் ஆண்டின் இறுதியில் நின்று போனதிற்கு சான்றுகளாய் திகழ்கின்றன. எபிரெயர் நிருபத்தின் எழுத்தாளர் இரண்டாம் அதிகாரம் முதல் நான்கு வசனங்களில், அடையாளங்களினாலும் அற்புதங்களினாலும் பலவிதமான பலத்த செய்கைகளினாலும், தம்முடைய சித்தத்தின்படி **பகிர்ந்து கொடுத்த** பரிசுத்த ஆவியின் வரங்களினாலும், தேவன்தாமே சாட்சி **கொடுத்ததுமாயிருக்கிற** என்று கூறுகிறார். இந்த வேத பாகத்தை நாம் மீண்டும் வாசித்து கூர்ந்து கவனிப்போமானால், எபிரெயர் நிருபத்தின் எழுத்தாளர் **இறந்தகால வினையுருவைப்** [past tense] பயன்படுத்தி இந்த செயல் முன்னமே நிறைவேறியதாக அதாவது முன்னமே நிகழ்ந்த சம்பவமாகத் தான் எடுத்துரைக்கிறார். அதுமாத்திரமல்ல இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த சபையின் பிதாக்கள் அந்நிய பாஷை வரம் உபயோகத்தில் இருந்ததாக ஒரு தெளிவையும் குறிப்பிடவில்லை. தவறான உபதேசங்களை பின்பற்றியும் போதித்தும் வந்த **மொண்டானஸ்** என்பவரின் சீஷர்களை தவிர இதுவரையிலும் கடந்த பல நூற்றாண்டுகளாக எந்த ஒரு கர்த்தருடைய ஊழியக்காரனும் அல்லது விசுவாசியும் பேசினதாக சரித்திரம் இல்லை.

ஆக, அந்நியபாஷை வரத்தையும் உள்ளடக்கி அனைத்து அடையாள வரங்களும், அற்புதங்களும் சபை ஸ்தாபித்தலுக்கும், சுவிசேஷ வசனத்தை கேட்கிறவர்கள் விசுவாசிப்பதற்கு ஏதுவாக அவைகளை உறுதி படுத்துவதற்கும், சபையானது பலுகி பெருகி

பக்திவிருத்தி அடைவதற்கும் ஆதி நூற்றாண்டிலே, அதாவது அப்போஸ்தலர்கள் வாழ்ந்த காலத்தில் பரிசுத்த ஆவியானவராலே பகிர்ந்தளிக்கப்பட்டதாகும். ஆனால், தேவனுடைய வார்த்தை அதாவது பரிசுத்த வேதாகமம் பரிபூரணமாக கிடைத்த பிறகு தேவனுடைய வார்த்தையை உறுதிப்படுத்துவதற்கு அடையாள வரங்களும், அற்புதங்களும் தேவையில்லை. ஏனென்றால் அவைகளுடைய அவசியம் இல்லாமற்போய்விட்டது. எனவே கி.பி. 100-ஆம் ஆண்டின் இறுதியில் அந்நியபாஷை வரம் ஓய்ந்துவிட்டது அல்லது நின்றுவிட்டது என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

## அந்நியபாஷையை குறித்து என்ன கூறுகிறார்கள்?

**ஒரு குடும்பத்தலைவி**: நான் சமையலறையில் பாட்டு பாடிக்கொண்டு சமையல் செய்துகொண்டிருந்தேன். அப்பொழுது திடீரென எனக்கே புரியாத பாஷையில் தேவனை துதித்து போற்ற ஆரம்பித்தேன். நான் என்ன சொன்னேன் என்று எனக்கு தெரியாது ஆனால் தேவனுடைய சமூகத்தை உணர்ந்தேன். இப்பொழுது எனக்கு புரியாவிட்டாலும் இன்னும் அதிகமாக அந்நியபாஷையில் பேசி தேவனை புகழுகிறேன்.

**ஒரு நிறுவனத்தின் பிரதிநிதி**: நான் இயேசுவை விசுவாசித்து ஏற்றுக்கொண்டேன். ஆனால் எனக்குள் சந்தோஷமும் சமாதானமும் இல்லை. ஒரு நாள் சபைக்கூட்டத்திற்கு சென்றேன், அங்கே ஆவியானவருடைய ஞானஸ்நானத்தை பெற்று அந்நிய பாஷையில் பேச ஆரம்பித்தேன். இப்பொழுது எனக்குள் சொல்லொண்ணா பேரின்பம் இருக்கிறது. அந்நியபாஷையில் பேசும்போது என்னையே மறந்து போகிறேன்.

**ஒரு செவிலியப் பெண்**: நான் கிறிஸ்தவளாக ஆனபோது, அந்நியபாஷையில் எப்படி பேசவேண்டும் என்று ஒரு நபர் எனக்கு காண்பித்து தந்தார். நான் அவ்வாறாகவே சிலகாலம் பேசி வந்தேன்; ஆனால் அதில் நான் திருப்தியடையவில்லை. இப்பொழுது நான் அந்நியபாஷையில் பேசுவதில்லை. பேசுவதை நிறுத்தி விட்டேன், இது சரியா தவறா என்று எனக்கு தெரியவில்லை. ஆனால் நிறுத்திய பிறகு இப்பொழுது திருப்தியாயிருக்கிறேன்.

**முன்பு மோர்மோன் வகுப்பில் இருந்த ஒரு நபர்**: நான் மோர்மோன் வகுப்பில் சேர்ந்தவனாய் இருந்த சமயத்தில் அந்நிய பாஷையில் பேசிக்கொண்டிருந்தேன். அந்நியபாஷையில் பேசும் போது தேவனுடைய வெளிப்பாடு கிடைக்கும் என்று எண்ணிக் கொண்டிருந்தேன். இப்பொழுது இயேசுவை என் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டேன்; அந்நியபாஷையில் பேசுவது தேவனிடத்தில் இருந்து வரவில்லை என்பதை அறிந்துகொண்டேன். அந்நிய பாஷையில் பேசுவது பிசாசிடமிருந்து வருகிறது என்று நினைக்கிறேன்.

**பின்மாற்றத்திற்குள்ளாக சென்ற ஒருவர்**: சில வருஷங்களுக்கு முன்பு நான் ஒரு சபையின் விசேஷ கூட்டத்திற்கு சென்றேன், அங்கு நான் ஆவியிலே நிறைந்து அந்நியபாஷையில் பேசினேன். பிறகு சபைக்கு தொடர்ந்து சென்றுகொண்டிருந்தேன்; அநேகரால் புகழப் பட்டேன். பிறகு நான் சபைக்கு செல்வதை நிறுத்திவிட்டு என் பழைய வாழ்க்கையை மீண்டும் பின்தொடர்ந்தேன். இப்பொழுது எனக்கு முன்பாக இருக்கிற ஒரே காரியம், மரிப்பதற்குமுன் எப்படியாவது இரட்சிக்கப்படவேண்டும்.

**ஒரு பெந்தெகொஸ்தே சபை போதகர்**: நான் இரட்சிக்கப்பட்ட ஆரம்ப நாட்களில் அந்நியபாஷைகளில் பேசினேன், ஆனால் இப்போது அவ்வளவாக பேசுவதில்லை. நான் இப்பொழுது விசுவாசத்தில் வளர்ந்துவிட்டேன், அதனால் அந்நியபாஷையில் பேசுவதற்கு மிக குறைந்த முக்கியத்துவம் மட்டுமே கொடுக்கிறேன். ஆனாலும், அந்நியபாஷையில் பேசுவது ஆவியானவருடைய ஞானஸ்நானம் என்று நம்புகிறேன், போதித்தும் வருகிறேன்.

**ஒரு பிரபலமான வேத பண்டிதர்**: ஏழு வருட காலம் அந்நியபாஷை தலைப்பின் கீழ் உள்ள அனைத்து புத்தகங்களையும் துண்டு பிரதிகளையும் படித்து, அந்நியபாஷைகளில் பேசுகிறவர் களோடு கலந்துரையாடிய பின்பு மெய்யாகவே நான் அறிந்து கொண்ட சத்தியம்: 1900 வருஷங்களுக்கு முன்பாகவே அப்போஸ்தலர்கள் கால கட்டத்தில் அந்நியபாஷை வரம் நின்றுபோய்விட்டது. [John MacArthur, The Truth About Tongues, Word of Grace, 1984, p.10]

**ஒரு பன்மொழி அறிஞர்**: சபை போதகர்களாலே இன்று தொலைக்காட்சியில் பேசப்படுகிற குளோசோலாலியா (அந்நிய பாஷையில் பேசுதல்) ஒருவருக்கொருவர் பேசுவதில் வித்தியாசப் படுகிறது. அவர்கள் பேசுகிற ஒலியின் அளவில் வித்தியாசம் உண்டு. ஆனால் தன்மையில் வித்தியாசம் இல்லை. எனவே இதை மதச்

சடங்காரங்களில் மூழ்கி தன்னையே அதிலே மூழ்கடித்து கொண்டு தன்னையும் மறந்து அருகில் என்ன நடக்கிறது என்கிற உணர் வில்லாத நிலையில் பரவசமாகி உச்சரிக்ககூடிய ஒருவிதமான அனுபவம் என்று கூறலாம். [George J. Jennings, "An Ethnological Study of Glossolalia," Journal of the American Scientific Affiliation, March 1968, pp.9,10]

**ஒரு மனோதத்துவ நிபுணர்**: அந்நியபாஷையில் பேசும் அனுபவமில்லாமல் அநேகர் மனதின் உள இயல்பு நிலையில் முதிர்ச்சியை அடைவதில்லை. அந்நியபாஷையில் பேசுதல் அவர்களுக்கு தன்னுணர்வற்ற நிலையில் முழுமையாக (கடினமாக இருந்தாலும்) செல்வதற்கு கதவை திறந்து கொடுக்கிறது. [Morton Kelsey, Speaking in Tongues, Hodden, 1965, p.222.]

**ஒரு பேராசிரியர்**: எங்களுக்கு பொதுவாகவே உலகில் உள்ள எல்லா மொழிகளையும் அதன் குடும்பங்களையும் விசேஷமாக ஆப்பிரிக்க மொழிகளையும் தெரியும். நூற்றுக்கும் அதிகமான மொழி களிலும் அதன் குடும்பங்களிலும் எங்களுக்கு தொடர்புகள் உண்டு. அந்நியபாஷையில் வருகிற எழுத்துருக்கள் அல்லது அதன் ஒலிகள் மெய்யாகவே பேசப்படுகிற மொழிகளுள் ஒன்றுதான் என்றால் ஒரு கணப்பொழுதில் அதை கண்டுபிடித்து விடுவோம். ஆனபடியினாலே அப்படி அந்நியபாஷை பேசுகிறவர்களிடமிருந்து அதன் மாதிரியைப் பெற்று ஆராய்ந்ததில்: மாறுபட்ட தன்மையிலுள்ள இரண்டு உயிரெழு த்துக்களின் ஒலிகளும், ஒருமித்த வர ஒவ்வாத மெய்யெழுத்துக்களும் ஒருமித்து சேர்ந்து ஒரே சமயத்தில் பிணைத்து உபயோகிக்கப்பட்டு கொத்து கொத்தாக அதாவது திரள் திரளாக ஒலிகளை ஏற்படுத்து கின்றன. இந்த ஒலியலை அதிர்வுகள் ஒரு முழுமையான மொழியை சார்ந்ததல்ல. [Analysis on glossolalia, In a letter to Christianity Today" by William E. Welmers, Professor of African languages at the University of California at Los Angeles.]

இன்னும் அநேகம் இருக்கின்றன இருப்பினும் பிறர் என்ன கூறு கிறார்கள் என்பதை நீங்கள் அறிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக சிலவற்றை மட்டும் மேலே குறிப்பிட்டிருக்கிறேன். இதிலிருந்து நாம் அறிந்துகொள்ள வேண்டியது என்னவென்றால், நான் அந்நிய பாஷையில் பேசினேன், பேசுகிறேன் என்று கூறுபவகர்கள் எல்லாம் தேவனுடைய வார்த்தை என்ன கூறுகிறது என்று ஆராய்ந்து பாராமல், தங்களுக்கு உண்டான அல்லது நேர்ந்த சம்பவங்களாக கூறுகிறார்கள்.

தங்களுக்கு நேர்ந்த அனுபவம் என்று கூறும்போது பொதுவாகவே யாரும் இல்லை என்று மறுக்க மாட்டார்கள். வேதம் என்ன சொல்லுகிறது என்று நிதானித்து அறியாமல் நான் அந்நியபாஷையில் பேசுகிறேன் என்று கூறிக்கொள்வது ஒரு தேவனுடைய பிள்ளைக்கு அழகல்ல. மேலே குறிப்பிட்டிருக்கிற சிலர் மெய்யாகவே வேதத்தையும் பிறர் பேசுகிறதையும் ஆராய்ந்து சரியான விளக்கத்தை அளித்து உள்ளார்கள்.

## அந்நியபாஷையை குறித்த ஆய்வு விளக்கங்கள்

பேசப்படுகிற அந்நியபாஷை மெய்யாகவே ஒரு பாஷையாக இருந்தால் அதற்குரிய விளக்கங்களை ஆராயலாம், ஆனால் பேசப்படுகிறது ஒரு பாஷையே இல்லை என்கிறபோது அதனைக் குறித்து விளக்குவதும் புரிந்துகொள்வதும் மிக கடினம்தான். கடினமாக இருப்பினும் ஆராய்வோம். இன்று பேசப்படுகிற அந்நிய பாஷையைக் குறித்து சில ஆய்வு விளக்கங்களை ஆராய்வோம்.

**மெய்மறந்த நிலை** (ECSTASY)**:** இது பழையதும் அதே சமயத்தில் பொதுவாக எல்லோராலும் கொடுக்கப்படுகிற ஒரு விளக்கமாகும். இதன்மூலம் அந்நியபாஷையிலே பேசுகிறவர்கள் மெய் மறந்து உச்சநிலைக்கு செல்கிறார்கள். இதனால் வரையறுக்கப்பட்ட அவர்களுடைய சிந்தனைகள் சிதறி சின்னாபின்னமாக மொழியில்லா உச்ச்சரிப்புகளாக கொட்டுகிறது.

**அறிதுயில் நிலை** (HYPNOSIS)**:** ஒருவர் தன்னுடைய மனதை வெறுமையாக்கி அதன்மூலம் தன்னை அறிதுயில் நிலைக்கு கொண்டு வருகிறார். இவ்வாறாக தனது அறிதுயில் நிலையில் அவருடைய சிந்தையில் எவையெல்லாம் கர்ப்பமாகிறதோ அவைகளை தமது நாவி னாலே ஒலிகளை எழுப்பி வெளிப்படுத்துகிறார்.

**உடலியல்பு கடந்த நிலை** (PSYCHIC CATHARSIS)**:** ஒருவர் தனது முதிர்ச்சியையும் சுய-நிறைவையும் தேடுகிறார், ஆனால் அதை அவரால் அடையமுடியவில்லை. இதனால் மிகவும் மன உளைச் சலுக்கும் எண்ணக்குலைவுக்கும் ஆளாகிறார். இப்படிப்பட்ட மன நிலையில் இருக்கும்போது திடீரென ஒரு பிரகாசத்தை காண்கிறார், தான் துப்புரவு அடையும் வழியையும் கண்டதாக கருதுகிறார். உடனே அவரையும் மீறி தன்னையே மறந்து ஒரு பரவசத்திற்குள் வருகிறார்.

**தன்னுணர்வற்ற நிலை** (BREAKTHROUGH OF THE UNCONSCIOUS): ஒரு முழு மனித வர்க்கம் அவை கூர்ந்து கவனித் தாலன்றி இது வெளிப்படையாகத்தெரியாத ஒரு தொகுப்பாகும். இந்த சூழ்நிலையில் தன்னுணர்வு அற்ற நிலைகளில் இருந்து தங்களுக்கே புரியாத இந்த அந்நியபாஷை வெளிப்படுகிறது.

**மனப்போராட்டத்திலிருந்து வெளியேறும் நிலை** (ESCAPE FROM CONFLICT): அன்பானாலும் வெறுப்பானாலும் அதை ஒரு பொருட்டாக்காமல் பின்னிறக்கத்தோடு பின்னோக்கிச் செல்லும் போக்கிற்கு வந்துவிடுகிறார்கள். இதனால் தங்கள் உணர்வுகளை எந்த மனப்போராட்டமும் இல்லாமல் சப்தத்தினாலே வெளிப்படுத்து கிறார்கள்.

**செறிவடைந்த மனன (மனப்பாட) நிலை** (EXALTED MEMORY): மீண்டும் மீண்டும் கேட்பதும் பேசுவதும் செய்வதாலே, மனது முற்றிலும் மனன நிலைக்கு இயற்கையாகவே ஒத்துழைக்கிறது. அதாவது கூறிய சொற்றொடர்களையோ அல்லது குறிப்பிட்ட சப்தத்தை மீண்டும் மீண்டும் சொல்லும்போது அவை மனதின் மனனத்தில் உறுதியாக பதிந்து விடுகிறது.

# முடிவுரை

மறுபடியும் பிறந்த தேவனுடைய பிள்ளைகளைப் பொறுத்தமட்டில், அனுதினமும் கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து அவற்றை வாசித்து தியானிப்பதிலும், வெளிப்படுத்தப்பட்டிருக்கிற சத்தியங்களை அறிந்துகொள்வதிலும், அவைகளைக் கைக்கொண்டு நடப்பதிலும் என்னே பேரானந்தம்! இதற்கு முடிவேது. இறுதியாக இவ்வைந்து பாகங்களின் கடைத்தொகையாக சில காரியங்களை உங்கள் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். இன்று பேசப்படுகிற அந்நியபாஷைகள் முற்றிலும் வேதத்திற்கு எதிர் மறையான, அன்னியமான காரியமாகும். முதலாம் நூற்றாண்டில் பேசப்பட்டதும் பின்பு முதலாம் நூற்றாண்டின் இறுதியிலே நின்றுபோனதுமான அந்நியபாஷை வரத்திற்கு இன்று அநேகர் உயிர் கொடுக்க எத்தனிக்கிறார்கள். அப்படி இன்றும் இருப்பதாக கூறிக்கொண்டு தங்களுடைய ஆதாயத்திற்காகவும் தற்புகழுக்காகவும் நற்பெயருக் காகவும் அநேகரை வஞ்சித்துக்கொண்டு இருக்கிறார்கள்.

அந்நியபாஷை வரம் மெய்யாகவே இன்றும் இருப்பதாக நினைத்துக்கொண்டு அநேகர் தேவனுடைய வார்த்தை என்ன சொல்லுகிறதோ அவைகளை மட்டுமே மனோவாஞ்சையாய் ஏற்றுக் கொண்டு காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று எல்லாவற்றையும் சோதித்துப்பார்த்து ஆராய்ந்து அதின்படி செய்ய மனமில்லாமல், காண் கின்றவைகளையும் கேட்பவைகளையும் அப்படியே ஏற்றுக்கொண்டு முழுமனதோடு விசுவாசித்து, தேவனுக்கு பிரியமில்லாத வகையில் தவறான உபதேசங்களுக்கு தங்கள் செவிகளை சாய்க்கிறார்கள்.

[It is a form of dissociation within the mentality of a person. It is in reality a separation, which blocks off the rational function of the brain with the result that action is produced apart from rational control. It is a means of conflict reduction, an agent of integration within the personality resulting in the sense of joy, peace and wellbeing which follows the experience. Often viewed as the apex of spiritual experience, when it has been attained Glossolalia is easily productive of self-exaltation.]

விசுவாசி தான் யார் என்பதையும் அவன் விசுவாசிக்கிறது என்ன என்பதையும் மறக்கும் தருணத்தில் தான் பிசாசின் தந்திரம் செயல்பட ஆரம்பிக்கும். சாதாரணமாக விசுவாசிகள் கர்த்தருக்கு ஸ்தோத்திரம் என்றாலே பிசாசுக்கு ஆத்திரம் வரும், இப்படி கர்த்தரையே

துதிக்காமல் அவருக்கு பிரியமில்லாத செயல்களை செய்யும்போது பிசாசு மெய்யாகவே கெம்பீரித்து ஆர்ப்பரிப்பான் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. நமது கர்த்தர் மத்தேயு 24:4,11,24-ல் கூறியதை நினைத்துப்பாருங்கள். பவுல் அப்போஸ்தலனும் எபேசியர் 5:6 மற்றும் 2தெசலோனிக்கேயர் 2:3-ல், அதையேதான் வலியுறுத்துகிறார். அப்போஸ்தலனாகிய யோவானும் 1யோவான் 4:1-ல், இதையே கூறி எச்சரிக்கிறார். ஆகையால் நாம் யாரோ கூறுகிறார்கள் அல்லது சபையின் போதகரே கூறுகிறாரே சரியாகத்தான் இருக்கும் என்று எண்ணி நிதானித்து அறியாமல், ஆராய்ந்து பாராமல், ஆவிக்குரிய வாழ்வுக்கு குறுக்கு வழியை தேடாமல், கர்த்தருடைய வார்த்தையை வாசித்து தியானித்து அவை உரைக்கும் சத்தியங்களை மட்டும் பற்றிக்கொண்டு கர்த்தருக்கு பிரியமுள்ளவர்களாக நடந்துகொள்ள தீவிரப்படுவோம். அதனால் அந்நியபாஷையைக் குறித்ததான புரிந்துக் கொள்ளுதலில் இதை வாசிக்கிற நீங்கள் யாவரும் சத்தியத்தை உறுதியாய் பற்றிக் கொண்டவர்களாய் காணப்படவேண்டும் என்பதே எனது விருப்பம்.

**“கடைசியாக, சகோதரரே, உண்மையுள்ளவைகள் எவைகளோ, ஒழுக்க முள்ளவைகள் எவைகளோ, நீதியுள்ளவைகள் எவைகளோ, கற்புள்ளவைகள் எவைகளோ, அன்புள்ளவைகள் எவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகள் எவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக்கொண்டி ருங்கள்.” (பிலிப்பியர் 4:8)**

**“ஆகையால், கிறிஸ்துவைப்பற்றிச் சொல்லிய மூல உபதேச வசனங்களை நாம் விட்டு, செத்த கிரியைகளுக்கு நீங்கலாகும் மனந்திரும்புதல், தேவன்பேரில் வைக்கும் விசுவாசம், ஸ்நானங்க ளுக்கடுத்த உபதேசம், கைகளை வைக்குதல், மரித்தோரின் உயிர்த் தெழுதல், நித்திய நியாயத்தீர்ப்பு என்பவைகளாகிய அஸ்தி பாரத்தை மறுபடியும் போடாமல், பூரணராகும்படி கடந்து போவோ மாக.” (எபிரெயர் 6:1-2)**

சமாதானத்தின் தேவன்தாமே உங்கள் யாவரோடும் இருந்து மெய்யான வெளிச்சத்திலே வழி நடத்துவாராக. ஆமென்.

***Published by:***

Bibie Insights Ministries
Sengalpalayam, Mettukuppam Post
Neyveli - 607802, Tamilnadu,
South India

***Book Format:***
**Ebook**